விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (11.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# கனடாவுடன் பேசுவதற்கு அரசாங்கம் கடும் முயற்சி

## கனடாவின் குற்றச்சாட்டை அடுத்து

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக கனேடிய அரசாங்கம் அண்மையில் சுமத்தியுள்ள குற்றச்சாட் டுக்களை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான எதிர் கால இராஜதந்திர உறவுகள் குறித்து கனேடிய தூதுவர் அல்லது தூதரக அதிகாரிகளை அழைத்து விவாதிக்க எண்ணியுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இதற்கான உத்தரவை வழங்கும் எனவும் எனினும் இதுவரை அப்படியான அழைப்பை அமைச்சு இன்னும் விடுக்கவில்லை என அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

கனடாவுடனான இராஜதந்திர உறவுகள் மற்றும் அதிகரித்து வரும் பிரச்சினைகள் தொடர்பில் அந்த நாட்டுடன் கலந்துரையாட அரசாங்கம் எண்ணியுள்ளது.

இலங்கையின் மனித உரிமை கவலைகளை காரணம் காட்டி கொழும்பில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள போவதில்லை என்று கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் அறிவித்திருந்தார்.

கனேடிய பிரதமரின் இந்த அறிவிப்பை அடுத்து இலங்கை அர சாங்கம் ஏதேனும் இராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை மேற்கொண்டுள்ளதா? என ஊடகவியலாளர்கள் கேட்ட போதே அமைச்சர் இதனை கூறினார்.

கொழும்பில் நடைபெறவுள்ள மாநாட்டை புறக்கணிக்க போவதாக அறிவித்துள்ளதன் மூலம் கனடா தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளமையை அமைச்சர் ரம்புக்வெல மீண்டும் வலியுறுத்தி னார்.

அரசாங்கமோ அதன் துணை அமைப்புகளோ போரின் போதோ அதற்கு பின்னரோ மனித உரிமை களை மீறவில்லை.

போரில் பொதுமக்களின் உயிரி ழப்பு பூஜ்ஜியமாகவே இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே அரசாங்கம் செயற்பட்டது. எனினும் சில தனிப் பட்ட சம்பவங்கள் நடத்திருக்கலாம்.

போரின் இறுதிக்கட்டம் தொடர் பாக கவனம் செலுத்தப்படுகிறது. கடந்த 30 வருடகால மோதல்கள் தொடர்பில் ஏன் கவனம் செலுத்தப் படுவதில்லை என்றும் அமைச்சர் ரம்புக்வெல கேள்வி எழுப்பி னார். (எ-11)

# தவிசாளராக சீ.வீ.கே.சிவஞானம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தவிசாளராக சீ.வீ.கே.சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சபையின் பிரதி தவிசாளராக அன்ரன் ஜெயநாதன் தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் தவிசாளராக

20-ம் பக்கம் பார்க்க

# சத்தியப்பிரமாண நிகழ்வை புறக்கணிக்க சில கட்சிகள் முடிவு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர்கள் தெரிவில் ஏற்பட்ட உட்கட்சி முரண்பாட்டையடுத்து இன்று காலை 9 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெறும் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் ஆளும்கட்சி உறுப் பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வினைக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் புறக் கணிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் தெரிவு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏகோபித்த தெரிவில்லை

20-ம் பக்கம் பார்க்க

# மாகாணசபை உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம்!

## வீரசிங்கம் மண்டபத்தில் பிரமாண்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வடக்கு மாகாண சபை உறுப் பினர், அமைச்சர்கள், தவிசாளர், அவைத்தலைவர்களின் பதவி யேற்பு நிகழ்வு இன்று காலை இடம பெறவுள்ளது.

இப்பதவியேற்பு நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக் கள் என அனைவரும் கலந்து கொள்ள முடியும் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

காலை 8.30 மணிக்கு தந்தை செல்வா சதுக்கத்தில் மலர் வணக் கத்துடன் ஆரம்பமாகும் இந் நிகழ் வினைத் தொடர்ந்து, யாழ்.வீரசிங் கம் மண்டபத்திற்கு பதவியேற்பா ளர்கள் உட்பட அனைவரும் வைபவ ரீதியாக அழைத்து வரப் பட்டு மண்டபத்தில் அக வணக்கத் துடன்நிகழ்வுகள்யாவும் ஆரம்பமாகவுள்ளன.

20-ம் பக்கம் பார்க்க

# ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்புக்கு அமைச்சுப்பதவி வழங்கவில்லை

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு வட மாகாண சபை யில் எந்த அமைச்சுப் பதவியும் வழங் கப்படவில்லை என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சி யின்பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவுக்கு அனுப்பிவைத்துளள கடிதத்தில் தெரிவக்கப் பட்டுள்ளதாவது,

20-ம் பக்கம் பார்க்க

# ஆர்ப்பாட்டத்திற்கு கொழும்பில் தடை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலை வர்கள் மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண் டிய முக்கிய நகரங்களில் ஆர்ப் பாட்டங்கள், போராட்டங்கள், பேரணி கள், கறுப்பு கொடிகளை இடுதல், பதாகைகளைக் காட்சிப்படுத் தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத் தின் அடிப்படையில் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் மூன்று வாரங்களுக்கும் இந்த தடை அமுலில் இருக்கும்.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கும் அரச தலைவர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம், தாமரைத் தடாகம் அரங்கு, நாடாளுமன்ற வளாகம், ஹிக்கடுவ, காலி, கண்டி, சீகிரிய மற்றும் ஹம் பாந் தோட்டை ஆகிய

20-ம் பக்கம் பார்க்க

# நிபுணத்துவத்தின் அடிப்படையில் அமைச்சர்கள் தெரிவாகினர்

## உத்தியோக பூர்வமாக கூட்டமைப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உறுப்பினர்களின் தகைமை கள், அனுபவங்கள், நிபுணத்து வங்கள் போன்றவற்றின் அடிப் படையில் வடக்கு மாகாண சபை யின் அமைச்சர்கள் தெரிவு மேற் கொள்ளப்பட்டதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்றையதினம் உத்தி யோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது உறுப்பினர்களிடம் இருந்து அவர்களின் தகைமைகள், அனு பவங்கள், விருப்பங்கள் சம்பந்த மாக தரவுகளைப் பெறக்காலதா மதம் ஆகிவிட்டதால் எமது அமைச் சர்களையும் அமைச்சுக்களையும் அடையாளம் காணவும் தாமதம் ஏற் பட்டுள்ளது. அப்படியிருந்தும் ஒரு வரின் தரவுகள் இன்னுங் கூட கிடைத்தபாடில்லை.

எமது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகள் தமது அமைச்சர் விருப்புகளைத் தெரி வித்திருந்தன. எனினும் சகல உறுப்பினர்களும் ஒரேமாதிரியான தேர்வுக்கே உட்படுத்தப்பட்டனர்.

போருக்குப்பின்னரான சூழலை கருத்தில் கொண்டு உறுப்பினர் களின் தகைமைகள், அனுபவங் கள், நிபுணத்துவங்கள், விருப்பங் கள் போன்றவற்றின் அடிப்படை யில் தேர்வு நடைபெற்றுள்ளது.

ஆட்சித்திறனுக்கு அடிகோலு பவை தகைமையும் திறமையும் ஆவன.

20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு கப்பமாகவே; சம்பூர் அனல் மின் நிலையம்

## ஜே.வி.பி. சாடல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுநல வாய நாடுகள் அமைப்பின் தலைவராக வேண்டும் என்ற தனது கனவை நனவாக்கி கொள்ள இந்தியாவுக்கு கப்பமாக சம்பூர் நிலக்கரி அனல் மின் நிலைய உடன்படிக் கையில் கையெழுத்திட்டு கொடுத்துள்ளார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பூர் உடன படிக்கையின மூலம் இலங்கை மின்சார சபைக்கு வருடாந்தம் 763 கோடி ரூபா இழப்பு ஏற்படும். அத்துடன் இலங்கையில் உள்ள குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 525 ரூபா இழப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இந்த உடன் படிக்கையானது நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலும் மிகவும் ஆபத்தானது.

சம்பூர் அனல் மின் நிலையத்தை நிர் மாணிப பதற்கு 500 ஏக்கர் நிலம் வழங்கப் படுகிறது. இந்த காணி கள் யாருடையது?. போர் நடைபெற்ற காலத் தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த நிலம் இலங்கை அரசினால் கைப்பற்றப்பட்டது.

இந்த காணிகளில் பாரம் பரியமாக வாழ்ந்து வந்த மக் களுக்கு அவற்றை வழங்கி யிருக்க முடியும். சம்பூரில் தமது சொந்த காணிகளில பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை திரு கோணமலையில் உள்ள முகாம்ஒன்றில்சிறை வைத்து விட்டு 500 ஏக்கர் காணியை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்குகிறது. இந்தகாணி களின்உண்மையான உரி மையாளர்கள் இலங்கையில் வாழுமமக்கள்என்றார். (எ-1)

# தவறவிடப்பட்டது

செவ்வாய்க்கிழமை (08.10.2013) அன்று காலை 11 மணிக்கும் 11.30க்கும் இடையில் சிவப்பிரகாசம் நிரோசன் என்ற பெயருடைய அடையாள அட்டை (இல. 912272931V) வாகன சாரதி அனுமதிப்பத்திரம், வங்கிக் கடன் அட்டை ஆகிய முக்கிய ஆவணங் களுடன் மணிபை ஒன்று நெல்லியடிக்கும் இராஜ கிராம வீதிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் 0779892046 எனும் எனது தொலைபேசி இலக்கத்துக்கு உடன் தொடர்பு கொள்ளு மாறு தாழமை யாகக் கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும்.

(சி-5131)

# மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நீல நிற YAMAHA FAZER WR-XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மலிவான நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.

**விலை : 260,000/-**

தொடர்புகளுக்கு : **0779107153**

**A.G. செல்வம்**

107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

(4143)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், நுண்நிதியியல் டிப்ளோமா - 2012
இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்

மனிதவள முகாமைத்துவம் - 2011
மூன்றாம் அரையாண்டு பரீட்சை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 10.10.2013ம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 25.10.2013 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

பரீட்சைகள் நவம்பர் மாத முற்பகுதியில் நடைபெறும். பரீட்சைக்கான நேரசூசியை பீடாதிபதி அலுவலக அறிவித்தற் பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர்.

(சி-5136)

# ஆத்ம சாந்தி அழைப்பு

தோற்றம்
1952 - 08 - 10



மறைவு
2013 - 09 - 13

சித்தன்கேணியை சேர்ந்த
அமரர் Lady Lion

## தவக்குமாரன் பரமேஸ்வரி

13.09.2013 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நாளில் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவோர்.

- இனிய வாழ்வகம் விழிப்புலன் அற்றோர் இல்லம் (புதுக்குடியிருப்பு)
- அன்பு சிறுவர் இல்லம் (முத்தையன்கட்டு)
- சிவபூமி முதியோர் இல்லம் (தொல்புரம்)
- பரமானந்தா முதியோர் இல்லம் (கரவெட்டி)

இங்ஙனம்
கணவர் Lion M. தவக்குமார்
நிசாந்தன் அஜந்தினி (பிரான்ஸ்)
சிவரூபன் சிவந்தினி
ரூபன் பல்பொருள் வாணிபம்
நிருமெடிக்கல் & கிளினிக்

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(C-5134)

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
### CHUNNAKAM

## விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகளை **திறந்த போட்டி கேள்வி கோரல்** நடைமுறைக்கு அமைவாகவே கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப படுகின்றது.
02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் தவிசாளர், **வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** chairmanvsps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை **09.00** மணி முதல் மாலை **15.00** மணி வரை, **11.10.2013**ம் திகதி தொடக்கம் 31.10.2013ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** vspsch@gmail.com) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 11.10.2013 முதல் 31.10.2013 வரை **9.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைக்கேள்விகள் 01.11.2013ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதியை தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் 01.11.2013 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்
06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 21.10.2013 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் கதிரமலை வீதி திருத்தம் | 5.028 | 03 மாதங்கள் | M7/C8 | 100,000.00 |
| 2 | ஏழாலை மாகியப்புலம் வீதி திருத்தம் | 0.994 | 03 மாதங்கள் | M7/C8 | 20,000.00 |

**தி.பிரகாஷ்,** தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-5138)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப் பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட் டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 14.10.2013 - 04.11.2013 பி.ப. 2 மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 05.11.2013 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 05.11.2013 பி.ப. 2 மணி
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம் மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலை விபரம் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமை அலுவலக எல்லை சுவர் அமைத்தல் | C 8 அல்லது அதற்கு மேல் | 18000.00 | 1000.00 | 20.00 |

திரு.அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்.
தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்.

(C-5142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப் பகுதியில் ஏகப்பட்ட கூட்டம். அங்கு இயேசு நாதர் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் பிரமாண்டமான துலாக்கோல் ஒன்றினை அந்த மக்களுக்கு காட்டினார்.

அப்படி ஒரு தராசை ஒருபோதும் அந்த மக்கள் அதற்கு முன் கண்டதில்லை.

இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து எடைபோடுகிறார் அவர்.

அதன் ஒரு பக்கத்தில் கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் வைக்கிறார். மலைச் சாரலில் வளர்ந்த ஒலிவ் மரங்கள், மலையடி வாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தைகள், விலையுயர்ந்த பொருட்கள் எல்லாவற்றையும் அதில் வைக்கிறார்.

இதையெல்லாம் எல்லோரும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றைய தட்டில் வைப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று பேசிக் கொண்டார்கள்.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஒரு தட்டில் வைத்தாயிற்று. அவ்வளவையும் ஈடுகட்டும் அளவுக்கு அடுத்த தட்டில் என்னதான் வைக்க முடியும்?

எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுநாதர் சுற்றுமுற்றும் பார்த்தார். பக்கத்தில் இருந்த ஒரு சின்னக் குழந்தையைக் தூக்கி வலது பக்கத் தட்டில் வைக்கிறார். அவ்வளவுதான்! இடப் பக்கத்தட்டு மெதுவாக மேலேபோக ஆரம்பித்தது. அதில் இருக்கும் பொருட்கள் எல்லாம் விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவுக்கு இருந்தது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமானின் முகத்தைப் பார்க்கிறார்கள். அதற்கு அவர் சொல்கிறார்.

"ஒருவன் தனது ஆன்மாவுக்குக் கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?" என்கிறார்.

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுயர்ந்தது மனிதனின் ஆன்மாதான் என்பதை இந்தச் சம்பவம் மூலம் அவர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்று நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை, அதுதான் காரணம்.

இப்பொழுது உலகத்தில் நடக்கும் சம்பவங்களையெல்லாம் பார்த்தால் மனித உயிர் அற்பமாகப் போய் விட்டதே என்ற எண்ணம்தான் தோன்றுகிறது!

சமீபத்தில் பத்திரிகையில் ஒரு நகைச் சுவைத் துணுக்கு பார்த்தேன்.

ஒரு ராஜா காட்டுக்கு வேட்டையாட போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவரோடுகூட வந்தவர்களிடம் விசாரிக்கிறார்.

"அமைச்சர் இருக்கிறாரா?" என்கிறார் ராஜா.

"இதோ இருக்கிறேன்!" என்றார் அமைச்சர்.

"சேவகர் இருக்கிறாரா?" என்றார்.

"இதோ இருக்கிறேன்!" என்றார் அவர்.

"தளபதி இருக்கிறாரா?" என்றார்.

"இருக்கிறேன்! என்றார் தளபதி.

"அப்பாடா! அப்படியானால் நான் சுட்டது கரடியைத் தான்!" என்கிறார் ராஜா.

மனித உயிர் மீது மன்னனுக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## நோயாளரை பார்வையிட வருவோர் குறுகிய நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்

### நீடித்து வரும் பிரச்சினைக்கு இதுவே தீர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய பாஸ் நடைமுறையினால் நோயாளர்களைப் பார்வையிட வருவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நோயாளர்களினதும் அவர்களைப் பார்வையிட வருவோர்களினதும் நலன்கருதி, இப்புதிய பாஸ் நடைமுறையில் வைத்தியசாலை நிர்வாகம் சாதகமான மாற்றத்தை கொண்டு வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாஸ் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் காலை தவிர்ந்த ஏனைய இரு பார்வையாளர் நேரங்களில் நோயாளர்களை எவ்வித தடையுமின்றி அவர்களின் உறவினர்கள் முதற்கொண்டு தெரிந்தவர்கள் அனைவரும் பார்வையிட முடிந்தது.

எனினும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கட்டப்பட்ட புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் வைத்தியசாலையில் அதிகளவிலான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலையில் தேவையற்ற சன நெரிசலைத் தடுப்பதற்கு இப்புதிய பாஸ் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்திருந்தார்.

அதன்படி நோயாளர் ஒருவரைப் பார்வையிடுவதற்கு இருவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இதில் நோயாளர் ஒருவரைப் பார்வையிடுவதற்கு என ஒரு பாஸ் அனுமதி முறைமையும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதனால் நோயாளியைப் பார்வையிடுவதாயின் பாஸ் அனுமதித் துண்டு வைத்திருத்தல் கட்டாயமாக்கப்பட்டது.

ஒரு குடும்பத்தில் 6 பேர் என்றால் அக்குடும்பத்தின் நோயாளி ஒருவரைப் பார்வையிட இருவர் மட்டுமே பாஸ்நடைமுறையின் கீழ் அனுமதிக்கப்பட்டனர்.

நோயாளி தவிர்ந்த ஏனைய 3 குடும்ப அங்கத்தவரும் நோயாளியைப் பார்வையிடுவதாயின் பாஸ் அனுமதிப்பத்திரம் உள்ள இருவரும் நோயாளியினை பார்த்து விட்டு வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அவர்கள் ஒவ்வொருவராக நோயாளியை பார்த்து விட்டு வருவதற்குள் வைத்தியசாலையினால் வழங்கப்பட்டுள்ள நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிவடைந்து விடும்.

பார்வையாளர் நேரம் முடிவடைந்த பின்னர் நீண்ட நேரமாக வைத்தியசாலையில் காத்திருக்கும் உறவினர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதி பாதுகாப்பு ஊழியர்களினால் மறுக்கப்படுகின்றது.

நீண்ட நேரம் காத்திருந்தும் நோயாளரைப் பார்வையிடும் அனுமதி மறுக்கப்படுவதனால் பார்வையாளர்களுக்கும் பாதுகாப்பு ஊழியர்களுக்கு மிடையில் முறுகல் ஏற்பட்டு அது கைகலப்பிலும் முடிவடைந்து விடுகின்றது.

பார்வையாளர்கள் நீண்ட நேரம் காத்து நிற்பதற்கு வைத்தியசாலையில் இடவசதி ஏற்படுத்திக் கொடுக்காமையினால் நீண்ட நேரம் அவர்கள் வீதியிலேயே காத்திருந்து தம்முடன் முரண்படுகின்றனர் என பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகமும் அபிவிருத்திக் குழுவும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இதேவேளை நோயாளர்களை பார்வையிடச் செல்வோர் நீண்ட நேரத்தை பார்வையிடுவதற்கு எடுத்துக் கொள்ளாது குறுகிய நேரத்தினை எடுத்துக் கொள்வதின் மூலம் அனைவருக்கும் பார்வையிட சந்தர்ப்பம் கிடைக்கும் என நிர்வாகம் தரப்பு தெரிவிக்கின்றது.

மேலும் கொழும்பிலுள்ள வைத்தியசாலைகளில் பார்வையாளர் ஒருவருக்கு 5 நிமிடம் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 100 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 40 | 60 | 80 |
| பூசணி | 20 | 20 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 170 | 100-140 | 200 |
| பெரிய வெங்காயம் | 110 | 60 | 120 |
| பாகற்காய் | 120 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 90 | 100 | 100 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 20 | 15 | 30 |
| கறிமிளகாய் | 80 | 50 | 100 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 120 |
| போஞ்சி | 100 | 90 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 35 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | - | 80 | 120 |

## இராசி பலன்

*11.10.2013*
*(புரட்டாதி 25, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சப்தமி மாலை 6.53 மணிவரை*
*மூலம் முற்பகல் 11.12 மணிவரை*
*இராகுகாலம் 10.32-12.02 மணிவரை*
*சுபநேரம் 6.02-7.32 மணிவரை*
*சரஸ்வதி பூசை ஆரம்பம்.*

**மேடம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, மறைமுக போட்டிகளை சமாளிப்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**இடபம்** மனக்குழப்பங்கள் தீர கணபதியை வழி படவேண்டியநாள், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், காரிய தாமதமுண்டு, பயணங்களின்போது கவனம்தேவை.

**மிதுனம்** உற்றார் உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்,நட்பு வட்டம் விரிவடையும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்** தொலைபேசிமூலம் பொன்னான தகவல்கள் வந்துசேரலாம்,தொழில் விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், சச்சரவை விட்டு சாதித்துக்காட்டும் நாள்.

**சிங்கம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத் தில் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** விவேகமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயர எளிய வழியொன்று யோசிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர்களின் தேவையைப் பூர்த்தி எண் ணம் உருவாகும்.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவி கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர் வருகையுண்டு, சுப செலவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள்,ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வருவாய்கள் கூடும், புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும், சஞ்சலங்கள் கூடும்.

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், செய்தொழிலில் நன்மையுண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், போசனசுகமுண்டு.

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பிள்ளை வித்தியில் நேற்றிரவு திருட்டு

கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள கல்வியங்காடு காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் திருட்டுச் சம்பவமொன்று நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டு சம்பவத்தில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு கணனிகள் திருட்டுப் போயுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பாடசாலை முடிவுற்றதும் வழமைபோல பாடசாலையைப் பூட்டிவிட்டு சென்றுள்ளனர். பின்னர் நேற்றுக் காலை வழமைபோல பாடசாலையைத் திறந்தபோதே திருட்டு நடைபெற்றமை தெரியவந்துள்ளது.


இதனையடுத்து திருட்டு தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு மோப்ப நாய்களுடன் சென்ற கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் இரு கணனிகள் திருட்டுப் போயுள்ளதோடு பாடசாலையில் இருந்த குளிர்பானங்களையும் திருடர்கள் குடித்து தாகம் தீர்த்துள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையின் யன்னல் கம்பிகள் வெட்டப் பட்டே இத்திருட்டு நிகழ்த்தப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அண் மைக்காலமாக இவ்வாறான சிறிய பாடசாலைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் இதற்கு தகுந்த பாதுகாப்பின்மையே காரணம் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (அ-4)



நன்றி: ஐலன்ட்

# புங்குடுதீவில் மாணவர்கள் திரண்டு 10 ஆயிரம் பனம் விதைகள் நாட்டல்

(புங்குடுதீவு)

கண்ணகைபுரம் முதல் நாகேஸ்வரம் வரையுள்ள கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் 10 ஆயிரம் பனம் விதைகள், புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்களால் நடுகை செய்யப்பட்டன. தொடர்ச்சியாக இப்பணியை முன்னெடுப்பதன் மூலம் வினைத்திறன் மிக்க பொருளாதார வளம் ஒன்றினை உருவாக்கி எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டியது எமது கடமை என்றார் பன்னிரண்டாம் ஆண்டு பயிலும் தனுஜன்.





எனினும் சில வருடங்களில் புங்குடுதீவை சுற்றியுள்ள கரையோர பிரதேசம் முழுமையும் பனம் கூடலாக ஆக்கப்படும். அதற்காக யுத்த சூழலால் செயல் இழந்துபோன சூழகம் (சூழலியல் மேம்பாட்டு அமைவனம்) அமைப்பினை பாடசாலை மட்டத்தில் மீண்டும் உயிரூட்டி இயக்கி எமது இலக்கினை அடையும் செயற்பாட்டில் இறங்கியுள்ளோம். விரைவில் அனைத்து பாடசாலை மாணவர்களையும் சூழக அமைப்பின் கீழ் ஒருங்கிணைத்து பனை நடுகை மட்டுமன்றி பயன்தரு மரங்களையும் நிழல் மரங்களையும் ஊர்முழுவதும் நடுகை செய்யவுள்ளோம் என்று சூழக செயற்பாட்டாளர்களான குகதாஸ், கவியரசன், மோகன், விஜய்ராகுலன் என பலரும் தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி, புங்குடுதீவு மகாவித்தியாலய பிரதேசம் பசும்சோலையாய் மாற்றம் பெறவிருக்கிறது என்று மாணவர்களிடம் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் உள்ளூர் விதைகளைக் கொண்டு மாபெரும் நாற்றுமேடை ஒன்று பாடசாலை வளாகத்தினுள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளது. (அ)

# ஜே/47 கி. சே. பிரிவில் சுனாமி ஒத்திகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலக பிரிவில் உள்ள காரைநகர் வடகிழக்கு பிரதேசத் தில் ஜே/47 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று வெள்ளிக் கிழமை பி.ப.3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டு கோளுக்கிணங்க தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# இரத்ததான முகாம்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் எஸ்.வாசுதேவனின் தலைமையில் நடைபெறவுள்ள இம் முகாமில் இரத்தக் கொடையாளிகளை அன்றைய தினம் தவறாது கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (அ-9-24)

# சிறப்பு சொற்பொழிவு

நவராத்திரி தினத்தையொட்டி சைவப் புலவர் பொன்.சுகந்தனின் சொற்பொழிவு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை சரஸ்வதி அம்மன் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

நவராத்திரியின் மகிமை எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள இச் சொற்பொழிவில் அனைவரையும் கலந்து பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-9)

NORTH LANKA IIT
வழங்கும் அரிய சந்தர்ப்பம்!
விஜயதசமி விழாவை முன்னிட்டு
50% Scholarship!
SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!
Business University - Costa Rica
நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!
* B.Sc. in Comp. Sc.
Qualification:- HND or O/L or A/L
Duration:- 1 - 3 Years
* M.Sc.
Duration:- 01 Year
* MBA
Special Batch!
கல்வியயற் கல்லூரி மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!
சலுகைக் கட்டணத்தில் ....
கனகபுரம் வீதி, (HNB க்கு அருகாமையில்), கிளிநொச்சி. TP : 0777471515
#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Tel: 0215677774 Mob: 0777592666
(C-5144)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

துன்னாலை வடக்கு பிரதேசத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவரென சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த நபரொருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த செப்டெம்பர் மாதம் துன்னாலை வடக்கு பிரதேசத்திலுள்ள வீடொன்றில் புகுந்து, வீட்டாளரை அச்சுறுத்தி 25 பவுண் நகைகளையும் ஒருதொகைப் பணத்தையும் கையடக்கத்தொலைபேசியினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தையடுத்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சந்தேகத்தின் பேரில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த ஒருவரை நேற்றுமுன்தினம் புதன் கிழமை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த சந்தேக நபரை விசாரணை செய்த நீதவான் அவரை அடையாளப்படுத்தும் வரை யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-60)




# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக் கோரி மருதங்கேணி மக்கள் ஆர்ப்பாட்டம்

(பொற்பதி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் அசமந்தப் போக்குடன் இருந்தமை, பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் அக்கறைகொள்ளாமை போன்ற காரணங்களை முன்வைத்து பாதிக்கப்பட்ட மக்கள் நியாயம் கேட்டு உரிய அலுவலகங்களுக்கு செல்கின்ற போதிலும் அவர்களை தகாத வார்த்தைகள் கூறி அவ்விடங்களை விட்டு வெளியேற்றுதல் மற்றும் தற்போது வழங்கப்பட்டு வரும் நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்குவதில் பாரபட்சம் காட்டுதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்கள் மறியல் போராட்டமொன்றை நேற்றைய தினம் நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இம் மறியல் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இப்போராட்டத்தினால் மருதங்கேணி பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் சில மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்தன.

சம்பவத்தைக் கேள்வியுற்ற மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அம் மக்களுடன் கலந்துரையாடியதுடன் பிரதேச செயலருடனும் உரையாடி அவர்களின் கோரிக்கைகளை 15 நாட்களில் நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதியளித்த பின்னரே போராட்டம் கைவிடப்பட்டது. ஆயினும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவிருப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்ததாக தெரியவருகின்றது. (அ-9-64)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாட்டிக் கொண்டார் மேர்வின் சில்வா

(கொழும்பு)

வீதியில் எந்த மனிதராவது கடத்திச் செல்லப்பட்டால் அவர் எனது இணைப்புச் செயலாளர் என்று கூறுவதற்கு நாட்டில் உள்ள ஊடகங்கள் புதுமையான அவசரத்தில் செயற்பட்டு வருகின்றன என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனி தொகுதியின் முச்சக்கர வண்டிகளுக்கு இலவசமாக மீற்றர் இயந்திரங்களை கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எவராவது கடத்திச் செல்லப்பட்டார்களாயின் ஊடகங்கள் உடனடியாக தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி கடத்திச் செல்லப்பட்டது உங்களது செயலாளரா என என்னைக் கேட்கின்றனர்.

கொழும்பில் அண்மையில் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டார். அவர் எனது இணைப்புச் செயலாளரா என்று என்னிடம் கேட்கப்பட்டது. அவர் எனது செயலாளர் அல்ல. எனினும்நண்பர்.

எனினும் நாட்டில் கடத்திச் செல்லப்படுபவர்கள் அனைவரும் மேர்வின் சில்வாவின் செயலாளர்கள் என்று கூறும் ஒரு தேவை என்னுடன் பகை பாராட்டும் சிலருக்கு இருக்கின்றது. இதுதான் மேர்வின் ஒவ்வாமை என்பதாகும் என்றார்.

ஆனால், அமைச்சர் மேர்வின் சில்வாவின் குற்றச்சாட்டை பொய்ப்பிக்கும் வகையில் ஆதாரம் தற்போது கிடைத்துள்ளது.

கொழும்பில்அண்மையில் கடத்தப்பட்டவர் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளர்தான் என உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கடத்தப்பட்டவரின் காரில் இருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. (அ-2)






## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் - 2014

வட இலங்கை சங்கீத சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப் படிவங்கள் 14.10.2013 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 04.12.2013 ஆகும். விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல், கடித உறையுடன் ரூபா 60/- (அறுபது) மட்டும்

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 75/- பெறுமதியான் காசுக்கட்டளையுடன் (மணி ஓடர்) சொந்த முகவரி எழுத்ப்பட்ட நீள் கடிதஉறையை வட.இ.ச.சபைக் காரியாலயத்திற்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தைப் பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் பணத்தினைச் செலுத்தி அவர்களால் வழங்கப்படும் படிவத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

**யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்**
**வட இலங்கைச் சங்கீத சபை,**
**மருதனார் மடம், சுன்னாகம்.**

எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:** 22.10.2013 ஆம் திகதி தொடக்கம் வட இலங்கை சங்கீத சபை புதிய கட்டடம் மருதனார்மடம் சுன்னாகத்தில் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

(சி-5127)

## சிவபூமி பாடசாலை கோண்டாவில் வாணி விழா

**காலம் : 11.10.2013 வெள்ளிக்கிழமை**
**மாலை 3 மணி**
**இடம் : சிவபூமி பாடசாலை மண்டபம்**

**தலைவர் :** செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

**பிரதம விருந்தினர்:**
கலாநிதி ரி.ஜெயசங்கர் வாசுகி தம்பதிகள்
(தலைவர் நுண்கலைத்துறை, கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்:** கவிஞர் திரு.க.ஜெயசீலன்,
(பிரதேச செயலர் - பருத்தித்துறை)

சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
நிர்வாக சபை
**சிவபூமி அறக்கட்டளை.**

(4126)

## திருக்காட்சி திருவிழா


(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தல திருக்காட்சித் திருவிழாதிருப்பலிநாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக மூன்று தினங்கள் ஆயத்த வழிபாடுகள் நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி தினமும் பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் நாளை நற்கருணை விழா இடம்பெறவுள்ளது. (அ-5)

## நவராத்திரி பாமாலை



பண்ணிசையால் பாமாலை சூட்டிப் பணிந்து
உன்னைத் தினம் போற்றிடவே
தெள்ளிய மனம் எனக்குத் தந்து
கலைஞானம் புகட்டிடுவாய் ஆயகலை வாணியே
அனு தினமும் உன்பாதம் பணிந்து நின்றேன்
அன்னை அவள் அருள் செய்ய
வந்துறைவாய் என் நாவினிலே
நாளும் நாளும் பல்லாண்டு பல்லாண்டு
பாரினிலே உன்புகழ் ஒலிக்கட்டும் காசினி எங்கும்

**ற.பிருந்தா**
**தரம்- 06A**
**யா/ பெரியபுலம் மகா வித்தி.**

# அரசை 25 ஆண்டுகளுக்கு தோற்கடிக்க முடியாது

நாட்டை ஆளும் அரசாங்கத்தை எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு தோற்கடிக்க முடியாது என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மிக பலம் பொருந்தியதாக காணப்படுகின்றது. எனவே, ஏனைய கட்சிகளை உடைக்க வேண்டிய அவசியமோ தேவையோ அதற்குக் கிடையாது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியை பிளவடைய செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை.

அரசாங்கத்தில் மேலும் மேலும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இணைந்து கொள்ள விரும்புவதாகவும் ஆளும் கட்சி அசைக்க முடியாத பலத்தைக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


**மனத்தளர்வா? தனிமையா?**
**வாழ்க்கையில் வெறுப்பா?**
உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.
**கைகொடுக்கும் நண்பர்கள்**
**021 222 8117**
(சி-5002)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (Sa)<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 46.5 சூரி, செவ் 8 இல்.<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA (Hons) PG Dip in Edu ஆசிரியர்(அரச)<br>தொ.இ:B773 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா :41<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc (Sp) in food Science Research Officer<br>தொ.இ:G880 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா. 15.75<br>உயரம்: 5'9"<br>தகைமை/ தொழில்: A/L NVQ CCNA, MCSE, Network Hard ware instructor<br>தொ.இ:B777 | பிறப்பு: 1970 இந்து (Na)<br>கி.பா :64 சூரி, செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Com ஆசிரியை (அரச)<br>தொ.இ:G893 |
| பிறப்பு: 1986 குருக்கள்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 165 Cm<br>தகைமை/தொழில்: Dip in teaching ஆசிரியர் (அரச) குருக்கள் தொழில<br>தொ.இ:B778 | பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா :53 செவ்: 1ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் : BA (Hons) Teacher (அரச)<br>தொ.இ:G978 |
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா:33<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BBA MBA தனியார் நிறுவனத்தில் காசாளர் (UK) UK Work Permit<br>தொ.இ:B780 | பிறப்பு: 1977 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: அனுஷம் 2<br>கி.பா :48, 1 இல் செவ்.<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L Dip.in Computer. Diploma in Montossori ஆசிரியர் (தனியார்)<br>தொ.இ:G1058 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
**(சர்வதேச இலவச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 வர்த்தகர்களுக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம்



(முல்லைத்தீவு)

சட்டவிரோத விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்ட 12 வர்த்தகர்களுக்கு 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முல்லைத்தீவு பகுதியில் பொது சுகாதார பரிசோதகர்களினால் நடத்தப்பட்ட அதிரடி சோதனையின் போது விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, விலை கூட்டி விற்றமை, பாவனைக்குதவாத பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 12 வர்த்தகர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா, 12 வர்த்தகர்களுக்கும் 80 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (ம)

# பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இ.போ.ச. முல்லைத்தீவு சாலை

(முல்லைத்தீவு)

**இ.போ.ச. முல்லைத்தீவு சாலை பல்வேறுபட்ட வளப்பற்றாக்குறைகளுடனும் ஆளணிப் பற்றாக்குறைகளுடனும் இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

கடந்த 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் ஆம் திகதி முல்லைத்தீவு தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள உண்ணாப்புலவு கிராமத்தில் ஏ-34 வீதிக்கு அருகில் 10 ஏக்கர் அரச காணியில் இச்சாலை ஆரம்பிக்கப்பட்டது.

இது நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு வரை சகல வசதிகளுடனும் இயங்கி வந்துள்ளது.

1990 முதல் 2009 வரை போரினால் இயங்காதிருந்து 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் இயங்க ஆரம்பித்தது.

எனினும் இந்த இ.போ.ச. சாலையில் பல்வேறு வளப்பற்றாக்குறைகளும் ஆளணிப்பற்றாக் குன்றகளும் உள்ளன.

45 ஊழியர்கள் இங்கு பணி புரிகின்றனர். இங்கு குடிநீர் கிணறு ஒன்று உள்ள போதிலும் அதன் நீர் உப்பு தன்மையாக உள்ளதால் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது.




நிழற்பிரதி வசதி, தளபாடவசதி என்பன இங்கு இல்லை. குறிப்பாக காரியாலயத்திற்கென மேசைகள், கதிரைகள், அலுமாரிகள் என்பன தேவைப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டுக்கு முன் இச்சாலையில் எரிபொருள் தாங்கி ஒன்று இருந்தது. தற்போது இந்த எரிபொருள் தாங்கி உள்ள போதும் அதற்கான பம்பி இல்லை. 35 பேருந்துகள் தேவைப்படுகின்ற போதிலும் 5 புதிய பேருந்துகளும் 7 பழைய பேருந்துகளும் பயன்படுத்த முடியாத பேருந்துகளுமாக 15 பேருந்துகளே இங்கு உள்ளன.

42 ஓட்டுநர்களும் 42 நடத்துநர்களும் தேவைப்படுகின்ற நிலையில் 20 நடத்துநர்களும் 16 ஓட்டுநர்களுமே கடமையிலுள்ளனர்.

அலுவலக உத்தியோகத்தர்கள் ஐவர் தேவைப்படுகின்ற நிலையில் ஒருவர் கூட இங்கு நியமிக்கப்படவில்லை.

பொறியியல் பகுதியில் ரயர் பொருத்துநர், மின் ஒட்டுநர் 2பேர் தேவைப்படுகின்ற போதிலும் ஒருவரேனும் நியமிக்கப்படவில்லை. இருவர் முகாரிமார் (போமன்) தேவைப்படுகின்ற நிலையில் ஒருவர் கூட இல்லை. எஞ்சின் திருத்துநர் (மெக்கானிக்) 8பேர் தேவைப்படுகின்ற நிலையில் 4பேரே உள்ளனர்.

அரச நடத்துநர், ஓட்டுநர், ஊழியர்களுக்கு சீருடை அளிக்கப்படவில்லை. அகில இலங்கை ரீதியாக அதிக வருவாயை இ.போ.சபைக்கு பெற்றுக் கொடுப்பது இச்சாலையே ஆகும்.

எனவே இச்சாலையில் உள்ள குறைபாடுகளை நீக்க வடமாகாண இ.போ.ச பிரதான பிராந்திய முகாமையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர் (ம-267)

# மாங்குளம் கிராமத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் அதிகரித்து வரும் திருட்டுக்களால் மக்கள் இரவு, பகலாக விழிப்புடன் இருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, விவசாய தேவைகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாயிகள் கிணற்றடியில் வைத்து பயன்படுத்தி விட்டு வீடு செல்லும் போது தருணம் பார்த்திருக்கும் திருடர் அவ் இறைக்கும் இயந்திரங்களை அபகரித்துச் செல்கின்றனர்.

இதுவரை 10இற்கு மேற்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

இதே நேரம் கடந்த வாரம் மாங்குளம் ஏ -9 வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மேற்கூரைகளை அகற்றி உள் நுழைந்த திருடர்கள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிசார் மோப்ப நாய்களைப் பயன்படுத்தி திருடர்களை பிடிக்க முயன்ற போதிலும் அது கைகூடவில்லை.

இதேபோன்று இடம் பெயர்ந்து மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட கோழிகளை பல வீடுகளில் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இதனால் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

அத்தோடு மதுபாவனை, கலாசார சீரழிவு என்பனவும் அதிகரித்து காணப்படுவதன் காரணமாக பொதுமக்கள் மத்தியில் ஒரு அச்சநிலையும் தோன்றியுள்ளது.

எனவே மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் பொலிசார் உரிய நடவடிக்கைகளை



எடுத்து இப்பிரச்சினைகளை கட்டுப்படுத்தி தர வேண்டுமென பொதுமக்களும் பொது அமைப்புகளின் பிரதி நிதிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்து ள்ளனர். (ம-15)







ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/யோகபுரம் மகா வித்தியாலயத்திற்கு 100 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 125 X 25 அடி கொண்ட இருமாடி வகுப்பறை கட்டடத்தை படத்தில் காணலாம்.

(படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

# வவுனியா மருந்தகங்களில் திடீர் பரிசோதனை



(குருமன்காடு)


வவுனியா மாவட்டத்திலுள்ள 22 தனியார மருந்தகங்களில் சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பதிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் பலவற்றில் மருந்தாளர்கள் பிரசன்னமாகியிருக்காமை அவதானிக்கப்பட்டதாகவும் பெரும்பாலான மருந்தகங்களுக்கு ஒரு வருடகால அவகாசம் வழங்கப்பட்டிருந்தும் இதுவரை பதிவுகள் மேற்கொள்ளாமல் இருப்பதாகவும் தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் இல்லாது மருந்தகங்கள் இயங்கி வருவதாகவும் மருந்துச் சிட்டைகளின்றி மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இத்திடீர் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறான குறைபாடுகளுடன் இயங்கி வரும் மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.மகேந்திரனின் பணிப்பின் பேரில் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எச்.எல்.எம்.அஸ்லம், உணவு மருந்து பரிசோதகர் ந.சஞ்சீவ், பிராந்திய மருந்தாளர் ந.மகேந்திரன் ஆகியோர் வவுனியாவிலுள்ள மருந்தகங்களில் இத்திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மக்களின் பேராதரவுபெற்றவரான**
**ஒய்வுநிலை பிரதம நீதியரசர்**
**வடமாகாணத்தின்**
**பெருமைக்குரியமுதலமைச்சர்**

## கௌரவ சீ.வி.விக்கினேஸ்வரன்

அவர்களையும்
சமூகசேவையில் மக்கள்
மனங்களைவென்றவரும்
இலங்கைகல்விநிர்வாகசேவைதரம்-I இல்
கல்விப்பணியாற்றிஓய்வுபெற்றவருமான
வடமாகாணத்தின் பெருமைக்குரிய
கல்வி அமைச்சர்

## கௌரவ த.குருகுலராசா

அவர்களையும்
அமையப்போகும் வடமாகாணத்தின் பெருமைக்குரிய ஏனைய
அமைச்சர்களையும், மாகாணசபை உறுப்பினர்களையும்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



"தங்களதுமக்கள் பணியால்
எமதுமாகாணம் மாண்புறும்"

**கல்விச் சமூகம்**
**கிளிநொச்சி மாவட்டம்**

(C-5128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசனும் ஆண்டியும்

மொகலாய சக்கரவர்த்தியாக அக்பர் இருந்த காலத்தில் டில்லி நகருக்கு அருகில் உள்ள ஒரு வனத்தில் இசுலாமிய சாது (பக்கிரி) ஒருவர் இருந்தார். அவரைத் தரிசிக்க மக்கள் தினமும் வந்துகொண்டிருந்தனர். தன்னைத் தேடி வனத்திற்குள் வரும் பக்தர்களுக்கு எந்த வசதியும் செய்து தர தன்னிடம் பொருள் இல்லையே என அவர் மிகவும் வருந் தினார்.

தங்குவதற்கு வசதிகளுக்கும் உபசரிக்கவும் வழியென்ன என்று எண்ணினார். மக்களை வெறுங்கையுடன் அனுப்பவும் அவருக்கு மனமில்லை.

அதனால் சக்கரவர்த்தி அக்பரிடம் சென்று பொருளுதவி பெறலாம் என்றெண்ணி பக்கிரி டில்லிக்குச் சென்றார். அவர் சென்ற வேளையில் சக்கரவர்த்தி அக்பர் மசூதிக்குத் தொழுகைக்குச் சென்றிருப்பதை அறிந்து தானும் தொழுகைக்குச் சென்றார். தொழுகையின்போது அரசனும் ஆண்டியும் சமமாகவே கருதப்படுவர். அதனால் சக்கரவர்த்தி அக்பர் அருகிலேயே பக்கிரி அமர்ந்து தொழ ஆரம்பித்தார்.



தொழுகையின் போது அக்பர் இறைவனை எண்ணி இறைவா! எனக்குச் செல்வம், பதவி, அரசுகளை மேன் மேலும் தந்தருளுக! என வேண்டினார். இதனைக்கேட்ட பக்கிரி, சக்கரவர்த்தி அக்பரிடம் எதுவும் கேட்காமல் திரும்பச் செல்ல முற்பட்டார். அப்போது சக்கரவர்த்தி அக்பர் அருகிலிருந்த பக்கிரியை அழைத்து தாங்கள் என்னைக் காண்பதற்கு வந்தீர்கள். எதையும் கூறாமல் திரும்பிச் செல்கிறீர்கள்! ஏன்? என்று கேட்டார்.

மன்னா! அதற்கு அவசியமே இல்லாமல் போய்விட்டது. அதனால் தான் திரும்பிச் செல்கிறேன் என்றார்.


விபரமாகக் கூறும்படி சக்கரவர்த்தி அக்பர் அவரிடம் கூறினார். உடனே பக்கிரி, சக்கரவர்த்தியாகிய தங்களிடம் ஒரு காரியத்திற்காக யாசிக்க வந்தேன். ஆனால், தாங்களே இறைவனிடம் யாசிப்பதைக் கேட்டேன். தாங்களே இறைவனிம் யாசிக்கும் போது தங்களிடம் நான் ஏன் யாசிக்க வேண்டும்? என்னைப்போல் யாசிக்கும் மற்றொரு பக்கிரியான உங்களிடம் யாசிப்பதைவிட இறைவனிடமே நேரடியாக யாசிக்க முடிவுசெய்துவிட்டேன் என்று கூறிவிட்டு பக்கிரி அந்த இடத்தை விட்டுச்சென்றார்.

★★★★

வெகு காலத்திற்கு முன்பு ஒரு கிராமத்தில் ஏழைச் சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பண்புமிகுந்த அவன் அறிவாற்றலில் மிகவும் சிறந்து விளங்கினான். யார் எந்தக் கேள்வி கேட்டாலும் சிறிதும் தயங்காமல் அதற்குத் தகுந்த விடையைக் கூறி வந்தான். அவனது அறிவுத் திறனை அனைவரும் வியந்தனர். அச்

# சிறுவனின் வியத்தகு அறிவு

சிறுவனின் புகழ் எங்கும் பரவியது. அந்த நாட்டு அரசனும் சிறுவனின் வியத்தகு அறிவு பற்றிக் கேள்விப் பட்டான்.



ஆனால், சிறுவனைப் பற்றிக் கூறப்படும் செய்தியை நம்ப மறுத்தான். ஒரு சாதாரண கிராமத்துச் சிறுவன் எந்தக் கேள்வி கேட்டாலும் எப்படி பதில் கூறமுடியும்? என்று சந்தேகம் கொண்டான். இது உண்மையா? என்று அறிய விரும்பினான். அச்சிறுவனைத் தன்னிடம் அழைத்து வருமாறு அரசன் ஆணையிட்டான். தானே அவனது ஆற்றலைச் சோதிக்க முடிவு செய்தான்.

சிறுவனும் அழைத்து வரப்பட்டு அரசன் முன்னிலையில் நிறுத்தப்பட்டான். அரசன் அவனைப் பார்த்து, சிறுவனே! நான் உன்னிடம் மூன்று கேள்விகள் கேட்பேன். அவற்றிற்குப் பொருத்தமான விடைகளை நீ கூறிவிட்டால் எனது மைந்தனாகவே ஏற்று அனைத்துச் சிறப்புக்களும் உனக்கு நான் செய்வேன் என்று கூறினான்.

அப்போது சிறுவன், அரசே! தாங்கள் என்ன .கேள்வி கேட்டாலும் எனது சிற்றறிவுக்கு எட்டிய மட்டிலும் பதில் அளிப்பேன் என்று மிகவும் அடக்கமாகக் கூறினான். முதல் கேள்வியைக் கேட்டான் அரசன்.

சிறுவனே! கடலில் எத்தனை துளிகள் தண்ணீர் உள்ளது என்பதைத் துல்லியமாக உன்னால் கணக்கிட்டுச் சொல்ல முடியுமா?

அதற்குச் சிறுவன், அரசே! அது முடியும். ஆனால், ஒரு வேண்டுகோள் என்றான்.

அது என்ன? என்று கேட்டான் அரசன்.

அரசே! கடலில் உள்ள நீர்த்துளிகளைத் துல்லியமாக எண்ண வேண்டியிருப்பதால் அவற்றை எண்ணி முடிக்கும் வரை உலகிலுள்ள ஆறுகளின் நீர் கடலில் விழாதபடி தடுத்துவிட ஏற்பாடு செய்யுங்கள். அவ்வாறு தடுக்கப்பட்ட மறு நிமிடமே நீர்த்துளிகளை எண்ணிக் கூறிவிடுகிறேன் என்றான் சிறுவன்.

அரசன் சிறுவனின் அற்புதமான பதிலைக் கேட்டு அசந்தே போனான்.

இதனை மறுக்க அவனானல் முடியவில்லை. (தொடரும்)




- 1138- சிரியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 2 இலட்சம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1801- காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக்கொளுத்தினர்.
- 1811- ஜொன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் 'கப்பலின் சேவை நியூயோர்க்கிற்கும் நியூஜேர்சிக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1852- ஆஸ்திரேலியாவின் மிகப்பழமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1865- ஜமெய்க்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அன்றைய பிரித்தானிய அரசால் நசுக்கப்பட்டதில் நானூறுக்கும் அதிகமான கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1899- இரண்டாவது போவர் போர் தென்னாபிரிக்காவில் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக ஆரம்பமானது.
- 1941- மக்கெடோனியாவில் தேசிய விடுதலைப்போர் ஆரம்பமானது.
- 1944- துனிசிய மக்கள் குடியரசு, சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.
- 1958- நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களில் பூமியில் வீழ்ந்து எரிந்தது.
- 1968- நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பலலோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.
- 1984-சலேஞ்சர் விண்ணோட்டத்தில் சென்ற கத்ரின் சலிவன் விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

**பிறப்புக்கள்**

- 1820- ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர் (இ.1896)
- 1826-மாயூரம் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப்புதின முன்னோடி (இ.1889)
- 1962-ஆன்என்ரைட், அயர்லாந்து பெண் எழுத்தாளர்

**இறப்புக்கள்**

- 1889- ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கிலேய [illegible]
- 2006- [illegible] பத்திரிகையாளர், எழுத்தாளர், (பி.1934)

**ஆணல்ட் சதாசிவம்பிள்ளை**

ஆணல்டின் தமிழ்ப்பெயர் சதாசிவம்பிள்ளை என்பதாகும். மானிப்பாயில் பிறந்த சதாசிவம்பிள்ளை, 1835 இல் கிறிஸ்தவரானார்.

மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற சதாசிவம்பிள்ளை, 1840 இல் பட்டதாரியாகி மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலையிலும், அமெரிக்க மிஷன் ஆங்கிலப்பாடசாலையிலும் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன்பின்னர் உடுவில் மகளிர் கல்லூரிக்கு 1847 இல் மாற்றம்பெற்றார்.

ஈழத்தின் முதல் பத்திரிகையான உதயதாரகை, மோனிங் ஸ்ரார் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணிபுரிந்தது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத்துறையின் வளர்ச்சிக்குப் பெருந்தூணாக இருந்தார். இவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது பாவலர் சரித்திர தீபகம் ஆகும். இதுதவிர கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்களையும் இயற்றி வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



ஆன்மீகம் 04

...இன்றைய உலகில் 0.1% பேர்தான் ஆன்மீப் பாதையைத் தேர்ந்தெடத்து அதில் இருப்பவர்கள். 50% பேர் இயந்திரங்கள் போல் இடையறாமல் செயற்பட்டு, தங்கள் செயல்களாலேயே உலகுக்கு கேடு விளைவிக்கிறார்கள்.


மனித சுயநலத்தின் காரணமாய், பூமி வேண்டாத பாரங்களை சுமந்து கொண்டிருக்கிறது. 50% பேரையாவது ஆன்மீக நெறியில் ஈடுபடுத்தினால் இந்த உலகம் காப்பாற்றப்படும்.

அளவுக்கதிகமான செயல்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டவர்கள் தங்களுக்கோ சமூகத்திற்கோ உலகிற்கோ சுற்றுச்சூழலுக்கோ கேடு விளைவிப்பதில்லை.

சிறிது கூட விழிப்புணர்வின்றி தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் மற்றவர்கள் செய்வதையெல்லாம் தாங்களும் செய்ய முற்பட்டவர்கள் பூமி உருண்டைக்கு போதுமான அளவு சேதம் விளைவிக்கிறார்கள். இத்தகைய செயல்களிலிருந்து விடுபடுவதொன்றும் தவறானதல்ல. அதுவே மனித குலத்திற்கு செய்கிற பெரும் உதவி.

இந்த உலகம் எப்போதுமே அற்புதமானதாக இருந்து வந்திருக்கிறது. தன்னலம் மிக்க சிலரின் அடாவடி செயல்கள், உலகுக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு அவர்கள் செய்யும் தீமைகள்- இவைதான் உலகிற்கு எதிரான ஒன்றை ஏற்படுத்தி வருகிறது.

மனிதகுலம் நாகரீகமடைந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆன பிறகும் மனிதகுலம் வாழ்வதற்காக எத்தனையோ விலங்குகளை வேட்டையாடி சில சமயம் மனிதர்களையே வேட்டையாடிய பிறகும் மனிதகுலம் நன்மையடையவில்லை.



மனிதன், வெளிச்சூழலை சரி செய்ய விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் உதவிகொண்டு என்னென்னவோ செய்துவிட்டான். ஆனால், அவன் உள் தன்மையில் நாகரீகமடையவில்லை.

உள்நிலையில் கவனம் செலுத்தி உரிய மாற்றங்களை ஏற்படுத்தினால் மட்டுமே மனிதன் உயர்நிலை அடைய இயலும். அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழியே, யோகம், தியானம் ஆகியவை.

சக்தி என்கிற சொல் மனித ஆற்றலைக் குறிக்கிறது. பொருள் தன்மை சார்ந்து பார்க்கிறபோது அது செயலாக வெளிப்படுகிறது. அது மட்டுமே சக்தி அல்ல.

உள்நிலையில் மனிதனுக்கென்று ஒரு சக்தி நிலை உள்ளது. அந்த சக்தி நிலைமையை மேம்படுத்துவதற்கென்று தான் யோக தியானம் என்ற ஆன்ம பயிற்சிகள் உள்ளன. ஆனால், யோகா மற்றும் தியானத்தின் மூல நோக்கமே இந்த சக்தியை மேம்படுத்துவதல்ல. அது ஒரு பக்க விளைவு.

தன் மூலத்தை மனிதன் உணர்வதற்காகத்தான் யோகா தியானம் போன்றவை. இதில் இரண்டு கேள்விகளை பலர் எழுப்புகிறார்கள். ஒன்று ஆன்மீக நிலையில் பல பயிற்சிகள் மேற்கொண்டு சக்தி நிலையை உயர்த்த முற்படுவது செயல்கள் மூலம் வெளிப்பட வேண்டுமா? இன்னொன்று இன்றைய அறிவியல் உலகில் அதிகார வேட்கை போன்றவை நிறைந்திருக்கிற உலகில் வாழ்க்கையிலிருந்து மனிதனை விலகிப்போகிற மனநிலையை ஆன்மீகம் ஏற்படுத்துமா?

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# அமெரிக்காவை அலற வைத்த வியட்நாமின் சிங்கம்- கியாப்

**1911 ஆம் ஆண்டு வியட்நாமில் பிறந்த ஜெனரல் வோ குயன் கியாப், கடந்த 04.10.2013 வெள்ளிக்கிழமை அன்று தனது 102-வது வயதில் மரணத்தைத் தழுவிவிட்டார்.**

**அவரது மனைவியும் தந்தையும் சகோதரியும் 1950களில் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களால் சிறையிடப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.**




எதிரிகள், ஒரு இராணுவத்தை மட்டும் எதிர்கொள்ளவில்லை. வியட்நாம் மக்கள் அனைவரையும் எதிர்கொண்டனர். யுத்தத்தின் முடிவை தீர்மானிப்பது பொருட்களும் ஆயுதங்களும் இல்லை. மக்கள்தான்.

வியட்நாம் ஜெனரல் வோ-குயன்-கியாப் தனது 102-வது வயதில் ஒக்டோபர் 4 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு இராணுவ மருத்துவமனையில் உறவினர்கள் சூழ காலமானார். ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா என்ற மூன்று ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வியட்நாம் மக்கள் நடத்திய நீண்ட கால போரின் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் வோ-குயன்- கியாப்.

ஜெனரல் கியாப், 1954 ஆம் ஆண்டு. பிரெஞ்சு காலனி ஆட்சியாளர்கள், அமெரிக்க இராணுவத்தின் துணையோடு வியட்நாம் மக்கள் மீது தொடுத்த ஆக்கிரமிப்பு போரின் 8-வது ஆண்டு. அதிகரித்து வரும் வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதல்களை சமாளிக்க பியன்-தியன்-பு என்ற இடத்தில் தனது படைகளை குவித்து தளம் ஒன்றை உருவாக்க முயன்றன பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகள். அந்தத் தளம் தகர்க்கப்பட முடியாதது, வலுவானது என்று பிரெஞ்சு, அமெரிக்க இராணுவ நிபுணர்கள் உறுதியாக நம்பினார்கள்.

### டெட் தாக்குதல்

ஆனால், அந்தத் தளத்தை சுற்றியிருந்த உயரமான மலைகளில் தாக்குதல் ஆயுதங்களை எடுத்துச்சென்று வியட்நாம் மக்கள் படைகள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பு படைகளை மண்டியிடச் செய்தன. 11,000 பிரெஞ்சுப் படையினர் சிறை பிடிக்கப்பட்டனர். இந்தோ சீனாவில் ஐரோப்பிய நாடுகளின் காலனியை ஆக்கிரமிப்புக்களுக்கு சவக்குழி வெட்டப்பட்டது.

ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமை விட்டுக்கொடுக்க தயாராகவில்லை. பிரெஞ்சு படைகள் துரத்தி அடிக்கப்பட்ட பிறகு 10 ஆண்டுகளுக்கு தெற்கு வியட்நாம் அரசுக்கு ஆயுதங்கள் அளித்தும் நேரடியாக அமெரிக்கப் படைகளை அனுப்பியும் வியட்நாம் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சித்தது. உலகின் மிகப் பெரிய முதலாளித்துவ நாடு, இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் யாராலும் எதிர்கொள்ள முடியாத அமெரிக்க அரசை, நெல் வயல்கள் நிறைந்த விவசாய நாடான பலவீனமான இராணுவம் கொண்ட வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கொண்டது.



1968 ஆம் ஆண்டு சயானில் உள்ள அமெரிக்க தூதரகம் உட்பட தெற்கு வியட்நாமில் உள்ள அமெரிக்க தளங்கள் பலவற்றில் ஒரே நேரத்தில் வியட்நாம் மக்கள் இராணுவமும் தெற்கு வியட்நாமின் வியட்காங் போராளிகளும் தாக்குதல் நடத்தினர். அமெரிக்கப் படைகளின் எதிர்த்தாக்குதலில் ஆயிரக்கணக்கான வியட்நாமியர்கள் உயிரிழந்தனர்.

இந்தப் போர் முழுவதிலும் அமெரிக்க ஆயுதங்களால் கொல்லப்பட்ட வியட்நாமியர்களின் எண்ணிக்கை 25 லட்சம், வியட்நாம் மக்கள் படையினரின் தாக்குதலில் உயிரிழந்த அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 58,000. கொல்லப்பட்ட அமெரிக்கப் படை வீரர்களின் உடல்பொதிகளையும் அமெரிக்க இராணுவம் வியட்நாம் மக்கள் மீது அவிழ்த்து விட்ட ஈவிரக்கமற்ற கொலைகளையும் தொலைக்காட்சியில் பார்த்த அமெரிக்க மக்கள் மத்தியில் அவர்களது அரசு கட்டியமைத்திருந்த பிம்பங்கள் சரிந்தன. போரை எதிர்த்து நடந்த அமெரிக்க மக்களின் போராட்டத்துக்கு அடி பணிந்தும், போரில் தோல்வி ஏற்பட்டதாலும் அமெரிக்கா வியட்நாமிலிருந்து விலகிக்கொண்டது. வியட்நாம் ஒரே நாடாக விடுதலை பெற்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இலங்கையில் சிறுவர் உரிமையும் சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

இயல்பான சுதந்திரத்தோடு வாழவும், தான் இசைந்து வாழும் சமுதாயத்திற்கான கடமைகளை முழுமையாகச் செய்ய மனிதன் முற்படும் வேளைகளில் விளையும் உரிமைகள் மறுக்கப்படும் போதோ, அல்லது அளிக்கப்பட்டு வந்த உரிமைகள் தடை செய்யப்பட்டாலோ மனிதன் தனது சமுதாயத்தின் மீது கேள்விகளைத் தொடுக்கின்றான். இத்தகைய உரிமைகள் மனித உரிமை எனப்படும்.

**சிறுவர் உரிமை**

சிறுவர்கள் மனிதப் பிறவிகள் என்ற வகையில், மனித உரிமைகள் அனைத்தும் சிறுவர்களுக்கும் உரித்தானதாகும். சிறுவர் உரிமைகளிலிருந்தே மனித உரிமைகள் தோற்றம் பெற்றன. சிறுவர் உரிமைகள் என்றால் சிறுவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை வழங்குவதற்கு அவசியமான நிபந்தனைகளே சிறுவர் உரிமைகளாகும். அதாவது சமூகதத்தில் சிறுவர்களுக்கு உரித்தாக வேண்டிய வரப்பிரசாதங்கள் சிறுவர் உரிமைகளாகும். பிரத்தியேகமான முறையில் சிறுவர்களுக்கேயுரியவை என்று சர்வதேச ரீதியாக ஐக்கிய நாடுகள் தாபனத்தால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் சிறுவர் உரிமைகளாகும்.


United Nations

உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களாகக் காணப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் நோக்கின், சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், உரிமை மீறல்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றன. சிறுவர்களுக்கு எதிராக துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்புணர்ச்சி, சிறுவர் தொழிலும் வேலைப்பளுவும், சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களில் இணைத்துக் கொள்ளுதல், கடத்தல்



மோசடிகள், உளரீதியாகப் பாதிப்புக்குள்ளாதல் என பல்வேறு வடிவங்களில் மிகக் கொடூரமான சம்பவங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. இத்தகைய நிலைமையில் இரண்டாம் உலகப் போரின் பின்னணியுடன் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது.

சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களில் 1989ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனம், ஒக்டோபர் முதலாம் திகதியை சிறுவர் உரிமைகள் தினமாகவும், ஜுன் 12ஆம் திகதியை சிறுவர் தொழிலாளர்களுக்கெதிரான தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக எழுத்துருவில் பல்வேறு பிரகடனங்களும் சட்டங்களும் ஆவணப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அன்றாடம் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களின் போக்கு அதி



கரித்து வருகின்றது. உலகின் எல்லாப்பாகங்களிலும் இருபது கோடிக்கும் (200 மில்லியன்) அதிகமான சிறுவர்கள் வேலை செய்து வருகின்றனர். இதில் பலர் முழுநாள் உழைப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அவர்களின் போதுமான கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம், உடல்நலம், அடிப்படை சுதந்திரம் என்பன இழககபபடுகின்றது.

இலங்கையைப் பொறுத்தளவில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரச கட்டமைப்பில் பல்வேறு காப்பீடுகள் காணப்படுகின்ற அதேவேளை தேசிய சர்வதேச ரீதியில் செயற்படும் அமைப்புக்களும் சிறுவர் உரிமைகள் பலவற்றைப் பாதுகாக்கும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களாக கொலைச் சம்பவங்கள், கடத்தல்கள், சிறுவர்களை வேலைகமர்த்தல், பாலியல்



ரீதியான துஷ் பிரயோகங்கள், பிள்ளை, தாய் பிரச்சினை போன்றவை அதிகரித்துச் செல்வதை அவதானிக்கமுடிகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ள அதேநேரம் மலையகப் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளமையை அவதானிக்கமுடிகிறது. மேலும நகர்ப்புறங்களில் வாழும் செல்வந்தர்களின் பிள்ளைகள் தனிப்பட்ட குரோதங்களுக்காகவும் பணத்திற்காகவும் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்படுகினற நிலைமையும் காணப்படுகின்றது.

**சிறுவர் உறுப்புரைகள்**

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ஆம் ஆண்டில்

> 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியர் ஆகக் கணிக்கப்படுவர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனை இலங்கை அரசு 1991ஆம ஆண்டு உறுதிப்படுத்தியது. இந்தச் சமவாயம் சிறுவர்கள் சிறப்பான மதிப்புக்குரியவர்கள் எனபதை ஏற்றுக்கொண்டு அவர்கள் பெறவேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரைமுறைப்படுத்தியது.

> எல்லா உரிமைகளும் வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி, சமயம் என்பன எவ்வாறிருப்பினும் எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் உரியன

இச்சமவாயத்தில் 54 உறுப்புரைகள் காணப்படுகின்றன. இதில் முக்கியமான 42 உறுப்புரைகளின் சாராம்சம் பின்வருமாறு.

***உறுப்புரை 01:- சிறுவர் பற்றிய வரைவிலக்கணம்***

18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியர் ஆகக் கணிக்கப்படுவர். அவர்கள் இந்தச் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

***உறுப்புரை 02:- பாகுபாடு காட்டாமை***

எல்லா உரிமைகளும் வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி அல்லது சமயம் என்பன எவ்வாறிருப்பினும் எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் உரியன. சிறுவர்களை எல்லா வகையான பாகுபாடுகளிலிருந்து காப்பதும் அவர்களின் உரிமைகளைப் பரப்ப ஆககபூர்வமான நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்.




***உறுப்புரை 03:- சிறுவரின் உயரிய நலன்கள்***

சிறுவர் தொடர்பான சகல நடவடிக்கைகளும் முடிவுகளும் அவர்களின் உயரிய நலன்களை முழுமையாக கருத்தில் கொள்ள வேண்டும்.

***உறுப்புரை 04:- சமவாயத்தை நடைமுறைப் படுத்தல்***

சமவாயத்தில் அடங்கியுள்ள உரிமைகளை நிதர்சனமாக்குவதற்கு அரசாங்கம் தன்னாலான அனைத்தையும் செய்தல் வேண்டும்.

***உறுப்புரை 05:- பெற்றோரின் வழிநடத்தலும குழந்தையின் வளர்ச்சியும்***

குழந்தைகளுக்கு அதன் பரிணாம வளர்ச்சிக்கு

> ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர் வாழும் உரிமை பிறப்போடு கூடியது

இசைவான முறையில் வழிகாட்டும் பொறுப்பு பெற்றோருக்கும், குடும்ப வட்டத்தை சேர்ந்தவரகளுக்கும் உண்டென்பதை அரசாங்கம் மதித்தல் வேண்டும்.

***உறுப்புரை 06:- உய்வும் மேம்பாடும்***

ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர் வாழும் உரிமை பிறப்போடு கூடியதொன்றென்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் உயர்வையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தும் கட்டுப்பாடு அரசாங்கத்தினுடையதாகும்.

***உறுப்புரை 07:- பெயரும் நாட்டு இனமும்***

ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்ததும் ஒரு பெயரைப் பெறும் உரிமையுடையதாகும். அத்துடன் ஒரு நாட்டினத்தைச் சார்வதற்கும் தன் பெற்றோர் இன்னாரென்று அறிவதற்கும் அவரகளால் பராமரிககப்டுவதற்கும் அது உரிமையுடையதாகும்.



***உறுப்புரை 08:- தனித்துவத்தைப் பேணல்***

குழந்தையின் தனித்துவ அடையாளத்தைப் பேணுவதும், அவசியம் ஏற்பட்டால் அதன அடிப்படை அம்சங்களை மீள நிலைநாட்டுவதும், அரசின் கடமையாகும். இதில் குழந்தையின் பெயர், இனம், குடும்ப பந்தங்கள் என்பன அடங்கும்.

***உறுப்புரை 09:- பெற்றோரைப் பிரிதல்***

(இம்சை, புறக்கணிப்பு முதலியன் காரணமாக) குழந்தையின் நலனுக்கு அவசியம் என்று கருதப்பட்டாலன்றி, மற்றும்படி தன் பெற்றோருடன் வாழும் உரிமை குழந்தைக்கு உண்டு. தாய் அல்லது தந்தையரிடமிருந்து பிரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இருவருடனும் உறவைப் பேணும் உரிமை பிளளைக்கு உண்டு.



***உறுப்புரை 10:- குடும்பம் மீளச் சேருதல்***

குடும்பத்தவர்களுடன் மீண்டும் சேர்ந்து கொள்ளும் பொருட்டோ, பெற்றோர்,பிள்ளை உறவைப் பேணும் பொருட்டோ, வேறொரு நாட்டை விட்டு வெளியேறித் தமது நாட்டினுள் நுழையும் உரிமை பிள்ளைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உண்டு.

***உறுப்புரை 11:- சட்டவிரோத இடமாற்றமும் மீளாமையும்***

> சிந்தனைச் சுதந்திரம், மனச் சாட்சி சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு.

பெற்றோரோ மூன்றாம் தரப்பினரோ சிறுவர்களைக் கடத்துதலை அல்லது மறித்து வைத்தலைத் தடுப்பதும் நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்.

***உறுப்புரை 12:- சிறுவரின் கருத்து***

தனது கருத்தை தெரிவிக்கும் சுதந்திரம் பிள்ளைக்கு உண்டு. பிள்ளையைப் பாதிக்கும் எந்த விடயத்திலும் அதன் கருத்தை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

***உறுப்புரை 13:- கருத்துச் சுகந்திரம்***

பிறரின் உரிமைகளை மீறினாலன்றி மற்

> தனது கருத்தை தெரிவிக்கும் சுதந்திரம் பிள்ளைக்கு உண்டு.

றும்படி தனது எண்ணங்களைத் தங்கு தடையின்றி வெளியிடவும் தகவல்கள் பெறவும், தன் கருத்தை அல்லது தகவலைத் தெரியப்படுத்தவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு.

***உறுப்புரை 14:- சிந்தனை, மனச்சாட்சி, மதச் சுதந்திரம்***

பெற்றோரின் முறையான வழிநடத்தலுக்கும் தேசிய சட்டத்துக்கும் அமைய, சிந்தனைச் சுதந் திரம், மனச் சாட்சி சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு.

***உறுப்புரை 15:- கூடும் சுதந்திரம்***

பிறரின் உரிமை களை மீறினாலன்றி மற்றும்படி பிறருடன் சேர்வதற்கும் சங்கங்கள் அமைத்தல், அல்லது அவற்றில் அங்கம் பெறுவதற்கும் சிறுவர்களுக்கு உரிமை உண்டு.



தொடரும்...

திருமதி G.செல்வலட்சுமி
**B.Sc (Hons), P.G.D.E. (Merit)**
ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய கல்லூரி

## வாரத்திற்கு ஒரு புதிர்! 94

**எந்த ஆண்டு முதன்முதலாகக் கட்டப்பட்ட அணு உலை இயக்கப்பட்டது?**

**புதிர் 94 இற்கான விடைகளை 21.10.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

**இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்

## புதிர் 93 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**செல்வி. அகிலா**
கணித முகிழ்நிலை ஆசிரியர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

**புதிர் 93 க்கான கேள்வியும் விடையும்:**

**ஐன்ஸ்ரைனின் திணிவு - சக்தி சமவலுமைச் சமன்பாடு யாது?**

$E=mC^2$

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 94

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொலைபேசி இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரப் பகுதியில் முன்னறிவித்தலின்றி தடைப்படும் மின்சாரத்தினால் மக்கள் அவதி

(குருமன்காடு)

**வவுனியா நகரப்பகுதியில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவதனால் இங்கு வாழ் மக்கள் மின்சாரத்தை நம்பி அதன்மூலம் செயற்படுத்தும் எந்த ஒரு வேலையும் முன்னெடுக்க முடியாதுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

நகரின் பல இடங்களுக்கு குழாய் மூலமே நீர் விநியோகிக்கப்படுகிறது. மின்சாரம் தடைப்படுவதனால் நீரை விநியோகிப்பதற்கான மோட்டரை எல்லா நேரத்திலும் பயன்படுத்த முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதனால் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது மக்கள் அல்லற்படுகின்றனர்.

இது தவிர நவராத்திரி பூசை காலங்களும திருவிழாக்களும் ஆலயங்களில் இடம்பெறுகின்ற பொழுது முன்னறிவித்தல் இன்றி ஆலயப் பகுதிக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்தை நிறுத்துவதனால் ஆலய வழிபாடுகள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நகரப் பகுதியில் உள்ள அரச திணைக்களங்களும் மின்தடைப்படுவதால் அடிக்கடி செயல் இழப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலைகளில் தொழில் நுட்ப பாடங்கள் தற்போது நடைமுறையிலுள்ள நிலையில் மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவதால் மாணவர்களின் இலத்திரனியலுடன் கூடிய தொழில் நுட்ப கற்கைகள் பாதிக்கப்படுகின்றன.

மேலும் கணனி கற்கை நிலையங்கள், தொலைத் தொடர்பு நிலையங்கள், வங்கி நடவடிக்கைகள் எனப் பல நிறுவனங்களின் செயற்பாடுகளும் பாதிப்படைகின்றன.



இது தொடர்பில் வவுனியா, மின்சார திணைக்களத்தின் வாடிக்கையாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளின் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன திருத்தம் முடிவடைந்ததும் மின்சாரம் கிடைக்கும் என்ற பதில்களையே திரும்பத் திரும்ப அவர்கள் கூறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் சீராக வழங்கப்படும் நிலையில் திருத்த வேலைகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது. அதேபோல் திடீர் என ஏற்படுகின்ற திருத்த வேலைகளுக்கு முன்னறிவித்தல் செய்யவும் முடியாது என்பதும் உண்மையே.

ஆனால் திட்டமிட்ட ரீதியில் மின்சார சபையால் ஒவ்வொரு பகுதிக்குமான மின்சார வேலைகள் இடம்பெற்று வருவதால் அதனை முன் கூட்டியே தெரியப்படுத்தின் அதனால் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் குறைக்கப்பட்டு மக்களது இயல்பு வாழ்க்கையில் பெரியளவிலான பாதிப்புக்கள் ஏற்படாதிருக்கும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். (ம-250)

## வவுனியாவில் மூன்று நாட்கள் மாநாடு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் மூன்று நாட்கள் மாநாடொன்றினை யெகோவாவின் சாட்சியங்கள் ஏற்பாடு செய்துள்ளது.

இன்றும் நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பொது நிகழ்ச்சி ஒன்றில் **பதில்களை தெரிந்து கொள் ளுங்கள்** எனும் தொனிப் பொருளில் முதலாம நாள் **சத்தியத்தின் தூணும் ஆதார முமான கடவுளுடைய சபையும்** எனும் கருத்தில் பேச்சும **கடவுளின் அதிசய செயல்களை தியானித்து பாருங்கள** எனும் நாடகமும் இரண்டாம் நாள் தொடர்ந்து **சத்தியத்தில் நடந்திடுங்கள** எனும் ஞானஸ்தான பேச்சும் இறுதிநாளான மூன்றாம் நாள் **சத்தியம் என்பது என்ன** எனும் பொதுப்பேச்சும், **துன்பங்களை சந்திக்க உங்கள் இதயங்களை தயார்ப் படுத்துங்கள** எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. (ம-266)

## ஏடு தொடக்கும் நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி விஜய தசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் துணை செயலாளர் சி. நாகராசா தெரிவித்தார்.

இதேவேளை சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இடம்பெற்று வரும் நவராத்திரி விழாவின் போது பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவிருப்பதாக தெரிவித்த அவர் 13 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருமதி சூரியாழினி வீரசிங்கத்தின் நிருத்திய நிகேதன மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-266)

## நால்வருக்கு அபராதம்

(முல்லைத்தீவு)

மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முல்லைத்தீவு, மல்லாவி பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்திய நால்வர் முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நால்வருக்கும் மேற்குறித்த அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை 2மாத காலத்திற்கு இடை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம)

## முன்னாள் போராளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(குருமன்காடு)

மேசன் தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 133 பேருக்கு சான்றிதழ் மற்றும் தொழில் சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, புனர்வாழ்வு நிலையங்களில் கடந்த காலங்களில் தடுத்துவைக்கப் பட்டிருந்த முன்னாள் போராளிகளுக்கு வவுனியா தொழிற்பயிற்சி கல்லூரி மூலம் மேசன் வேலை பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

குறித்த பயிற்சி நெறியைப் பூரணமாக கற்று சித்தியடைந்த 133 முன்னாள் போராளிகளுக்கு தொழில் செய்வதற்கான உபகரணங்களும், பயிற்சி நிறைவுச் சான்றிதழ்



களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், வவுனியா பூந்தோட்டம் புனரவாழ்வு நிலைய பொறுப்பதிகாரி மேஜர் நாமல்திலகரட்ன, வவுனியா இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர், வவுனியா தொழில் பயிற்சிக் கல்லூரி அதிபர், நைற்றா நிறுவன அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-250)











வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரதேசத்தில் க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்த சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கு சிப்தொர கல்வி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தை சேர்ந்த மாணவியொருவருக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் எஸ்.இராஜ்ணபவன் சான்றிதழ் வழங்குவதையும் பிரதேச செயலாளர் க.பரந்தாமன் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் த.தே.கூட்டமைப்பு எதிர்கொள்ளவுள்ள சவால்கள்



வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய வெற்றியைப் பெற்றிருந்த போதிலும், முதலமைச்சர் பதவியேற்பு, அமைச்சர்கள் நியமனம் குறித்து முடிவுகளை எடுப்பதற்கு இரண்டு வாரகாலம் பிடித்துள்ளது.

ஒரு பிரமாண்டமான தேர்தல் வெற்றிக்குப்பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்த விவகாரங்களில் நீடித்த இழுபறியும் சிக்கல்களும், வடக்கு மாகாணசபையை வெற்றிகரமாக கொண்டுநடத்துவதில் உள்ள சவால்களை வெளிப்படுத்தியுள்ளன.

முதலமைச்சர் யார் முன்னிலையில் பதவியேற்பது என்ற விவகாரத்திலும், அமைச்சர்கள் நியமனம் குறித்தும் எழுந்த இழுபறிகள், ஒரு பிரமாண்டமான வெற்றிக்குப் பிந்திய சூழலை, கவலைக்குரிய விவகாரமாக்கிவிட்டன.

வடக்கு மாகாண முதல்வராக யாரை நிறுத்துவது என்று, மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், கிட்டத்தட்ட இதேபோன்றதொரு இழுபறி நிலை கூட்டமைப்புக்குள் தோன்றியிருந்தது. ஆனால், கடைசியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிறுத்திய, ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனே முதன்மை வேட்பாளர் என்ற ஒருமித்த முடிவுக்கு இணங்கும் நிலை எற்பட்டது.

ஒரு கட்டத்தில், இது சம்பந்தனின் தன்னிச்சையான நியமனம் என்ற விமர்சனங்கள் எழுந்த போதிலும், இந்த முடிவை தமிழ் மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு, மாகாணசபைத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அளிக்கப்பட்ட, ஒரு இலட்சத்து 31 ஆயிரம் விருப்பு வாக்குகளே சாட்சியாக உள்ளன.

விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்தாமல் போயிருந்தால், இத்தகைய பிரமாண்டமான வெற்றியை தமிழ் மக்கள் கொடுத்திருப்பார்களா- வேறொரு முதன்மை வேட்பாளரால், இந்தளவுக்கு விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்க முடியுமா என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயங்கள் தான்.

தேர்தல் அறிவிப்பு வெளியானதும், முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், சற்று சலசலப்புக்கள் நிலவினாலும், சி.வி.விக்னேஸ்வரன், முன்னிறுத்தப்பட்ட பின்னர் அவையெல்லாமே அடங்கிப் போயின. அதுபோலவே தான், தேர்லில் வெற்றி பெற்றதும் யார் முன் பதவியேற்பது- யார் யாரை அமைச்சர்களாக நியமிப்பது என்ற விடயத்திலும் இழுபறிகள் தோன்றின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வேட்பாளர்களை அறிவித்தபோது, அவர்களில் அரசியல்வாதிகளல்லாத துறைசார்ந்த விற்பன்னர்கள் பலரும், உள்ளடக்கப்பட்டிருந்ததால், தேர்தலில் வெற்றி பெற்றால், அமைச்சர்கள் நியமனத்தில் சிக்கல்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது. அந்தப் பிரச்சினை தான் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வெடித்தது.

முதலமைச்சர் வேட்பாளரை முன்னிறுத்தியே போட்டியட்டதால், தேர்தல் வெற்றிக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அதுகுறித்த முரண்பாடுகள் ஏற்படவில்லை. ஆனால், முதலமைச்சர் யார் முன்னிலையில் பதவியேற்பது என்ற விடயத்தில், கிட்டத்தட்ட ஒரு தேவையற்ற சர்ச்சையே தோன்றியதாகத் தெரிகிறது. சட்டவிதிகளையும், மரபுகளையும் மட்டுமன்றி, காலச் சூழலையும் கவனத்தில் கொண்டு செயற்படுவது தான் வெற்றிகரமான அரசியல் தலைமைகளின் பண்பாக இருக்க முடியும்.

இந்த விடயத்தில் இரா. சம்பந்தனும் சி.வி.விக்னேஸ்வரனும் எடுத்த முடிவுகள், ஒரு தரப்பினருக்கு ஜீரணிக்க முடியாததாக இருந்தாலும், தற்போதைய அரசியல் நடைமுறைக்கு அதைவிடப் பொருத்தமான அணுகுமுறை வேறேதும் இருந்திருக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கள், கடும்போக்காளர்களும் மென்போக்காளர்களும் மட்டுமன்றி, இரண்டுக்கும் இடைப்பட்டவர்களும் உள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவியேற்பதன் மூலம் அரசாங்கத்துக்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி, சர்வதேச சமூகத்துக்கும் ஒரு தெளிவான செய்தியைக் கொடுக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதிலும் தான் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவியேற் பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள ஒரு தரப்பினர் பிரசாரத்தில் இறங்கியது தான் வேடிக்கையான விடயம்.

தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு வேட்பாளரும் எந்தவொரு கட்சியும் தாம், இலங்கை அரசாங்கத்தின் உதவிகளைப் பெறாமல் ஆட்சியை நடத்துவோம் என்றோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் முன்பாக பதவியேற்க மாட்டோம் என்றோ வாக்குறுதி கொடுத்திருக்கவில்லை.

அப்படிவாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்றிருந்தால், அது வடக்கு மாகாண மக்களின் தீர்ப்புக்கு எதிரானது என்ற முடிவுக்கு வரமுடியும் மத்திய அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள ஒரு மாகாணசபையில், வரையறுக்கப்பட்ட அதகாரங்களுடன் எதிக்கட்சி ஒன்றினால் ஆட்சியை நடத்துவது எத்தனை சிரமமான காரியம் என்பதை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே வெளிப்படுத்தியிருந்தார்.

மேல்மாகாணத்திலேயே இத்தகைய நிலை என்றால், வடக்கில் நிர்வாகத்தை நடத்துவதற்கு எந்தளவுக்கு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஊகிப்பது எவருக்கும் கடினமாக இருக்காது.

எல்லாவற்றிற்கும் மத்திய அரசையே நம்பியிருக்க வேண்டியதொரு சூழலில், தமக்கு வாக்களித்த மக்களின் தேவைகளை அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டுமானால், வடக்கு மாகாணசபை, அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டால் தான் சாத்தியமாகும்.

தேசியப் பிரச்சினை விடயத்தில் கடைப்பிடிக்கப்படுவது போன்று, மாகாணசபை நிர்வாகத்தையும், முரண் அரசியல் போக்கில் அணுக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தனிக்குமேயானால், அடுத்த தேர்தலின் போதும் அரசாங்கம் எதையும் தரவில்லை, எம்மால் ஒன்றும் செய்யமுடியவில்லை என்றே வாக்குக் கேட்கும் நிலை ஏற்படும்.

மத்திய அரசாங்கத்திடம் உதவியைப் பெறாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்றாமல், மாகாண நிர்வாகம் ஒன்றை இயக்குவதால், யாருக்கும் எந்தப்பயனும் கிடைக்கப் போவதில்லை.

இதனால், அடுத்த தேர்தலில் இத்தகையதொரு நிர்வாகம் எதற்கு என்று சிந்திக்கும் நிலைக்கு வடக்கில் உள்ள மக்கள் தள்ளப்படுவார்கள். அதற்காக, இணக்கப்போக்குடன் செயற்பட்டால் மாகாணசபைக்கான எல்லா உதவிகளையும் மத்திய அரசாங்கம் செய்யும் என்று முழுமையாக கருதிவிட முடியாது.

ஆனால், அத்தகையதொரு நிலைக்கு ஒருபோதும், மாகாண நிர்வாகம் பொறுப்பல்ல என்ற உண்மையை, மக்களால் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தினாலும் விளங்கிக் கொள்ள முடியும். இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில், பதவியேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் எடுத்த முடிவு, தூரநோக்குக் கொண்டவை.

இந்தச் சூழலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்களும் தமது நிலையில் இருந்து வெளிவரத் தயாரக இல்லை. இது தான் சிக்கலின் அடிப்படை.

இந்தளவுக்கு, தமிழ்த் தேசியக் கூடடமைப்பில் போட்டியிட்ட அனைவரும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள அனைவருமே, இலங்கையை துண்டாடுவதற்குத் துணைபோக மாட்டோம் என்ற சத்தியக் கடதாசியை கொடுத்துள்ளவர்கள் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் நியமன விடயத்திலும் எழுந்த சிக்கல் சற்று வேறுபட்டது. நான்கு கட்சிகள், ஐந்து மாவட்டங்கள் துறைசார் நிபுணத்துவம் என்று பல்வேறு சிக்கல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முகம் கொடுக்க நேரிட்டது.

ஆனால், கடைசியில் முதல்வர் விக்னேஸ்வரன் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வார் என்று அறிவிக்கப்பட்டதும் தான், அந்த விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி பிறந்தது.

இவையெல்லாம் வடக்கு மாகாணசபையை கொண்டு நடத்துவது ஒன்றும் சுலபமான காரியமாக இருக்காது என்ற உண்மையை வெளிப் படுத்தியுள்ளன.

அதாவது, ஒரு பக்கத்தில் மத்திய அரசாங்கம், இன்னொரு பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் போக்காளர்கள், மற்றொரு பக்கத்தில் சர்வதேச சமூகம், என்று மும்முனை அழுத்தங்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல், வடக்கு மாகாண நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வது மிகவும் சவாலுக்குரிய விடயம்தான்.

ஆனாலும், நீதிமன்றத்தில் எப்போதும் இருவேறு முரண்பட்ட வாதங்களுக்குள் நடுநிலையுடன் செயற்பட்டு பழகிப்போனவர் என்பதால், எத்தகைய முரண்பட்ட கருத்துகள் எழுந்தாலும், அதைச் சமாளிக்கும் திறன் பெற்றவராக வடக்குமாகாண முதல்வர் இருப்பதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகப்பெரிய பலம்.

-கே.சஞ்சயன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்மாட் கைபேசிகளுக்கான LG நிறுவனத்தின் பற்றறி




LG நிறுவனமானது மீள்தன்மை கொண்ட ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது. இந்நிலையில் அவ்வாறான கைப்பேசிகளுக்கான வளைந்த பட்டரிகளையும் அறிமுகம் செய்துவைத்துள்ளது.

இவை LG நிறுவனத்தின் பட்டரிகளை உற்பத்தி செய்யும் பிரிவான LG Chem இனால் வெளியிடப் பட்டுள்ளது. இந்த பட்டரிகள் LG G2 ஸ்மார்ட் கைப்பேசியில் இணைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்தின் வேகம் நாளுக்குநாள் வளர்ச்சி காண தொழில்நுட்ப சாதனங்களின் வடிவங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த வகையிலே தற்போது வெளிவந்துள்ள சில Pen Drive வகைகள்.

## Galaxy Note 10.1




சாம்சங் நிறுவனமானது Galaxy Note 10.1 எனும் தனது புதிய டேப்லட்டினை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

10.1 அங்குல அளவு மற்றும் 2560 x 1600 Pixel Resolution தொடுதிரையினைக் கொண்ட இந்த டேப்லட்டில் 1.9GHz வேகம் கொண்ட Quad Core Samsung Exynos 5420 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM ஆகியன காணப்படுகின்றது. சேமிப்பு நினைவகமாக 16GB மற்றும் 32GB கொள்ளளவு தரப்பட்டுள்ளதுடன் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, வீடியோ அழைப்புக்களுக்கான 2 மெகாபிக்சல்களை உடைய துணையான கமரா போன்றவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

# மின்னலில் உள்ள சக்தி மூலம் கைபேசியல் மின்னேற்றம்




மின்னலில் உள்ள சக்தியின் மூலமாக கைபேசியில் மின்னேற்றம் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். பிரிட்டனிலுள்ள செபத்தாம்ப்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இக்கண்டுபிடிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானி களில் ஒருவரான நீல் பால்மர் கூறுகையில்,

நொக்கியா நிறுவனமானது இத்தகைய சவாலை எங்களிடம் ஒப்படைக்கும்போது நாங்கள் உற்சாகமானோம்.

முதலாவது மின்மாற்றியின் மூலமாக மின்னல் சக்தியை ஒத்த 2,00,000 வோல்ட்ஸ் மின்சாரத்தை 300 மில்லி மீற்றர் இடைவெளியில் செலுத்தி, அந்த சமிக்ஞைகளை இரண்டாவது மின்மாற்றி மூலமாக செல்போனுக்கு சார்ஜ் ஏற்றும் அளவிலான மின்சாரமாக மாற்றினோம்.

இதன் மூலமாக இயற்கை சக்திகளை மனித பயன்பாட்டுக்கு கொண்டுவர இயலும் என்று கண்டறியப்பட்டுள்ளதாக பால்மர் தெரிவித்தார்.

## புதிய கைபேசி - *Xiaomi MI3*





Xiaomi கைப்பேசிகளின் புதிய வரவாக Xiaomi MI3 எனும் வேகம் கூடிய ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகமாகவிருக்கின்றது. எதிர்வரும் ஒக்டோபர் 15ஆம் திகதி அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இக்கைப்பேசியில் Snapdragon 800 tif Processor பிரதான நினைவகமாக 2GB RAM என்பன காணப்படுகின்றன.

இவற்றின் திரையானது 5 அங்குல அளவு மற்றும் 1920 x 1080 Pixel Resolution உடையதாகக் காணப்படுகின்றது. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய துணையான கமரா போன்றனவும் தரப்பட்டுள்ளன.

இவற்றில் 16GB சேமிப்பு கொள்ளளவுடைய கைப்பேசி 327 டொலர்கள் எனவும், 64GB சேமிப்பு கொள்ளளவுடைய கைப்பேசி 408 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேஸ்புக் நகரம்

இன்றைய காலகட்டத்தில் பேஸ்புக் இல்லை என்றால் எதுவே இல்லை என்று கூறும் அளவுக்கு மக்கள் அடிமையாகி உள்ளனர். உலகளவில் பிரபலமான சமூக வலைத்தளங்களில் பேஸ்புக் முதலிடம் வகிக்கிறது.

இந்நிலையில் பேஸ்புக் நிறுவனம், சேன்பிரான்சிஸ் கோவில உள்ள St.Anton என்ற பில்டிங் நிறுவனத்துடன் இணைந்து ஒரு புதிய நகரை உருவாக்க உள்ளது. பேஸ்புக் கில் வேலை செய்யும் ஊழியர்களுக்காக இங்கு வீடு கட்டப்படுகிறது.

இதன் மதிப்பு 120 மில்லியன் டொலர் ஆகும். Anton [illegible] என்ற பெயர் கொண்ட இந்தத் திட்டத்தில் 208 சிங்கிள் பெட் ரூம், அப்பார்ட்மென்ட், 139 டபிள் பெட் ரூம் அப்பார்ட்மென்ட் மற்றும் பேஸ்புக்கில் உள்ள உயர் அதிகாரி களுக்காக 12 றிபிள் பெட் ரூம் அப்பார்ட்மென்ட் கட்டப்பட உள்ளது. மேலும் 35 ஸ்டுடியோக்கள், ஸ்விம்மிங் பூல், ஸ்பா, காம்பிளக்ஸ்கள் என அனைத்தும் இதில் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை கிராமத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யுங்கள்

## வட்டு. கிராம அபி. சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் பல அத்தியாவசிய குறைபாடுகள் நிலவுகின்ற போதிலும் பல வருடங்களாக இவற்றை நிர்வத்திசெய்ய நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என வட்டுக்கோட்டை கிராம அபிவிருத்தி சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இது தொடர்பில் அச்சங்கம் அறிக்கை ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

குறித்த பகுதியில் உள்ள நான்கு விவசாயக் கேணிகள் பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாது தூர்ந்து அழிவடையும் நிலையில் உள்ளன.

இக் கேணிகளை விவசாயிகள் கோடைகாலத்தில் மிகவும் நம்பியிருப்பதுடன் கால்நடைகளும் இக் கேணிகளிலேயே நீர்பருகி வருகின்றன.

மேலும் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்கும் மக்கள் இக் கேணிகளை பயன்படுத்தி வரும் நிலையில், இக் கேணிகளை புனரமைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதே நிலையில் இப் பகுதியிலுள்ள கொத்தன்துறை மயானமும் அதற்கான வீதியும் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.

இம் மயானம் தகனக் கிரியைகளுக்கான எவ்வித கட்டமைப்புகளையும் கொண்டதாக இல்லை எனவும் தகரக் கொட்டகைகள் எதுவும் இல்லாமையால் மழை காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இம்மயான வீதி உட்பட பிரதான வீதி மற்றும் விவசாய வீதிகளான அரசடி வீதி, அற்சின்கன் வீதி, முதலிக் கோவில் வீதி, மூளாய் வீதியுடன் இணையும் வீதி, திக்கிராய் வீதி, கலட்டி வீதி என்பனவும் 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாது பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்நிலையில் இவ் வீதிகளூடாக அன்றாட அத்தியாவசிய பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இதேவேளை, பிரதான வீதிகள் மற்றும் சிறுவீதிகளில் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவில் இவை இருளில் மூழ்கியுள்ளன.

இவ்வாறான நிலைமைகளை தாம் 2002 ஆம் ஆண்டுமுதல் சுட்டிக்காட்டி வருவதோடு இதற்கான நவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதேசசபை, சங்கானை பிரதேச செயலர், 2002 ஆம் ஆண்டில் கடமையிலிருந்த அரச அதிபர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன் அதன் பின்னரும் தொடர்ந்தும் இப் பிரச்சினைகள் பற்றி தம்மால் வெளிக் கொணரப்பட்ட போதிலும் உரியவர்களால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என மேற்படி வட்டுக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே, இனி மேலும் காலம் தாழ்த்தாது, குறித்த பகுதியின் அபிவிருத்திக்கு அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், அரச நிர்வாகங்கள், அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் சார்பில் குறித்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-5)

# ஆரோக்கிய வாழ்வு கலந்துரையாடல்

இணுவில் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து இணுவில் அறிவாலயம் நடத்தும் நீரிழிவு நோய்க்கு முகம்கொடுக்கும் வழிமுறைகள் எனும் கருப்பொருளிலான வைத்திய பரிசோதனை மற்றும் கலந்துரையாடல் கருத்தரங்கு என்பன நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் அதன் தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பேராசிரியர் க.தேவராஜா, வைத்தியர்களான ஜே.மகாதேவா, திருமதி கஜந்தினி முருகஜெயன், எழினி நாகராஜா மற்றும் உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# மானிய உர விநியோகம்

நவாலி விவசாய சம்மேளனத்தில் மானிய உரம் பெற்றுக் கொள்வதற்கு பதிவுகளை மேற்கொண்ட நவாலி தெற்கு, கிழக்கு விவசாயிகள் இன்று வெள்ளிக்கிழமை அவ் உரத்தை நவாலி வடக்கு கமநல சேவைகள் பெரும்பாக உத்தியோகத்தர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவித்துள்ளனர். (அ-9-)

# நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு வண்ணார்பண்ணை பகுதியிலும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் பகுதியிலும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-5)

# தமிழ்-சிங்கள தேசியம் இணக்கத்திற்கு வந்துள்ளது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சராக, சீ.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையானது, நீண்டகாலத்திற்கு பின்னர் தமிழ்த் தேசியமும் சிங்களத் தேசியமும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள சந்தர்ப்பமாகும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சந்தர்ப்பம் பல காலத்திற்கு பின்னர் இலங்கையில் நடைபெற்ற மங்களகரமான நிகழ்வாகும். நாட்டில் நீண்டகாலமாக நீடித்து வந்த கொள்கை ரீதியான முரண்பாட்டு வரலாற்றை இந் நிகழ்வு ஒரு முடிவுக்கு கொண்டு வந்துள்ளதுடன் புதிய அத்தியாயம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்துடன் எம்மிடையே இருக்கும் பல்வேறு விதமான கொள்கைகள் முடிவுக்கு வந்து விட்டன என எண்ணிவிடக் கூடாது.

எனினும் அரச நிர்வாக கட்டமைப்புக்குள் பணியாற்ற அனைவரும் இணங்கியுள்ளனர். இவ்வாறு இணைந்து பணியாற்றிக் கொண்டு எமக்கிருக்கும் அரசியல் ரீதியான கருத்துக்களை வெளியிடவும் அதற்கு அமைவாக செயற்படவும் சுதந்திரம் உள்ளது. இதனால் நாட்டின் பிரதான நபர் என்ற வகையில் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த மாகாண சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனை ஒரு ஆரம்ப சந்தர்ப்பமாக கருத வேண்டும் என்றார். (அ)



சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சல் சமூகம்; நகுலேஸ்வரா பாலர் பாடசாலை, சிவானந்தா பாலர் பாடசாலை ஆகியவற்றிலுள்ள சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிய போது....

# இறப்பர் உற்பத்தி நாடுகளின் வருடாந்த மாநாடு ஆரம்பம்

இயற்கை இறப்பர் உற்பத்தியில் ஈடுபடும் சர்வதேச நாடுகள் அமைப்பின் வருடாந்த மாநாடு கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்று வருகிறது.

இம்மாநாடு நிலையான இயற்கை இறப்பர் பொருளாதாரத்தில் நாம் எவ்விடத்தில் இருக்கிறோம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்று வருகிறது.

இந்தியா, சீனா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 130 நாடுகள் இம் மாநாட்டில் பங்கேற்றுள்ளன.

இலங்கையில் இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டு வரும் நிலையில் வருடாந்தம் இறப்பர் மூலம் இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைக்கின்றது.

நாட்டில் அரை மில்லியன் மக்கள் இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் இதன்மூலம் பெருமளவு தொழில் வாய்ப்பும் உருவாக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை இறப்பர் உற்பத்தி நாடுகள் மாநாட்டில் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதுடன் இத்துறையில் எதிர்நோக்கும் சவால்கள், இறப்பர் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது மற்றும் இறப்பர் உற்பத்தித் துறையின் முன்னேற்றம், எதிர்கால திட்டங்கள் குறித்தும் நாடுகளுக்கிடையில் கருத்துகள் பரிமாறப்படவுள்ளன. (அ-2)

# மனித உரிமை விவகாரம் குறித்து அரசியல்வாதிகளுக்கு விளக்கம்

அரசியல்வாதிகளுக்கு மனித உரிமை விவகாரம் குறித்து விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் குறித்த விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் மனித உரிமை விடயங்கள் குறித்து அரசியல்வாதிகளுக்கு கருத்தரங்குகளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.


அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பரிந்துரைக்கு அமைய இந்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மனித உரிமை விவகாரம் குறித்து கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக அண்மையில் வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய புதிய உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பில் விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஏற்கனவே பொலிஸாருக்கும் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பிற்குள் ஓரங்கட்டும் முயற்சிகள் நடக்கிறதா?


Dr. ப.சத்தியலிங்கம்
சுகாதார அமைச்சர்


பா.டெனிஸ்வரன்
உள்ளூராட்சி நிர்வாக அமைச்சர்


த.குருகுலராஜா
கல்வி அமைச்சர்


பொ.ஐங்கரநேசன்
விவசாயம், கால்நடை, நன்னீர் மீன்பிடித்துறை அமைச்சர்

திருவனந்தபுரத்துத் தேர் இருப்பிற்கு வந்ததுபோல வடக்கு மாகாணத்தின் நான்கு அமைச்சர்களும் தெரிவாகியுள்ளனர்.

இந்த இறுதித் தீர்மானம் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஒரு விடுதியில் மிகவும் இரகசியமாகக் கூடி எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைத்தேர்தலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்கொண்டிருந்தபோதிலும் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது.

அதேநேரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூட்டிய கூட்டத்தில் ஒத்தூதல் தவிர்ந்த ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதான செய்திகளும் வெளியாகியுள்ளன.

எதுவாயினும் வடக்கின் அமைச்சர்களைத் தெரிவுசெய்வதில் ஒருவாறு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது கூட்டமைப்பின் கூட்டுக்கு அவசியம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இருந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தவறாக வழி நடத்துகின்றார் என்ற கருத்துக்களும் கூட்டமைப்புக்குள் பரவலாகப் பேசப்படுகின்றது.

இதில் உண்மை எது, பொய் எது என்பதை விட, வெளிப்படைத் தன்மை என்பது முக்கியமானது. ஒருசிலர் கூடி தீர்மானம் எடுப்பதென்பது சர்வாதிகாரப் போக்கையே சுட்டி நிற்கும்.

எனவே எந்தத் தீர்மானமாயினும் அது தமிழ்மக்களின் நன்மை சார்பானது என்பதால் வெளிப்படைத்தன்மைக்கும் கூட்டுக் கட்சிகளின் ஒப்புதலுக்கும் அமையத் தீர்மானங்களை எடுப்பது முரண்பாடற்ற சுமுகமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.

வடக்கு மாகாண சபைக்கு எழுத்தில் இருக்கக்கூடிய அதிகாரங்களும் வழங்கப்படும் அதி காரங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கவே செய்யும்.

ஆனாலும் தமிழ்மக்கள் வடக்கு மாகாண சபை தொடர்பில் கடுமையான எதிர்ப்பைக் கொண்டுள்ளனர்.

தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே உண்மையான விருப்பமாக இருந்தால் இரகசியக் கூட்டம் நடத்துவது ஒரு விசமத்தனமான நடவடிக்கையாகும்.


தேர்தல் காலங்களில் ஊடகவியலாளர்களை நாடிய கூட்டமைப்பின் தலைமை, கூட்டம் கூடி முக்கிய தீர்மானங்களை எடுக்கும்போது ஊடகவியலாளர்களை ஒதுக்கிவிடுவதென்பது எந்த வகையிலும் நியாயப்பாடானதல்ல.

நீங்கள் இரகசியமாகக் கூட்டத்தைக் கூட்டுங்கள். ஆனால் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஊடகவியலாளர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எந்தத் தீர்மானம் எடுத்தாலும் அவை தமிழ்மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். தமிழ் மக்கள் அறியக்கூடாது என்று உங்களால் கருதப்படும் எந்த விடயமும் உங்கள் நலன் சார்ந்ததாக இருக்க முடியுமேயன்றி, அது தமிழ்மக்களின் நலன் சார்ந்ததாக இருக்க முடியாது.

அதேநேரம் நீங்கள் இரகசியமாக எடுக்கும் தீர்மானங்கள் சிலவேளை உங்கள் பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்துவதற்கும் களம் அமைத்துவிடும். எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, கூட்டங்களைக் கூட்டும்போது, கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுவது கட்டாயம். அவ்வாறாக அழைப்புவிடவில்லை என்றால் கூட்டமைப்புக்குள் இருக்கும் தமிழரசுக்கட்சி, உள்நோக்கத்துடன் செயற்படுகின்றது என் சந்தேகம் கொள்ளும் ஒரு சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.

## தமிழ் மக்களின் நம்பிக்கையை முதலமைச்சர் காப்பாற்றவேண்டும்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற தமிழ்த்தேசிய உணர்வுடைய ஒரு அமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனரேயன்றி, தமிழரசுக் கட்சியில் இருக்கக்கூடிய அனைவரையும் புனிதமான தமிழ்ப்பற்றாளர்களாகக் கருதி தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை.

எனவே, தேர்தல் முடிந்துவிட்டது என்ற நினைப்போடு சுயமாகச் செயற்படாமல் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைத் தொடர்ந்தும் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

### கொழும்பில் குடியிருந்த நிர்வாகிகள் வடக்கிற்கு வரவழைப்பா?

வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீது தமிழ்மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். ஒரு சிலர் அவரின் அரசியல் பிரவேசத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரின் வருகையைத் தடுத்துவிடக் கடும் பிரயத்தனம் செய்தபோதிலும் அத்தகையவர்களுக்கு தமிழ்மக்கள் நல்ல பாடம் புகட்டினர்.

எனவே தமிழ்மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நடந்துகொள்வார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இருந்தும் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தனது பணிக்கான நிர்வாகிகளின் நியமனங்களில் கொழும்பில் குடியிருக்கும் நிர்வாகிகளுக்கே நியமனம் வழங்குகிறார். யுத்த சூழ்நிலையிலும் தமிழ்மக்களோடு இருந்து தமிழ்மக்கள் பட்ட துன்பங்களின் போதெல்லாம்; ஓடித்திரிந்து உதவி செய்து, அரசின் நிலைப்பாடுகளை உணர்ந்து, அதற்கேற்றவாறு எதிர் வியூகம் அமைத்த தமிழ் இனப்பற்றாளர்களுக்கு முதலமைச்சரின் நிர்வாகத்தில் இடம் கொடுத்தால் என்ன? என்ற கேள்வி எழுப்பப்படுமாக இருந்தால், அதில் நியாயம் இருக்கவே செய்யும்.


எனவே விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சரானது பெரியவிடயமல்ல. மாறாக தேர்தலின்போது எவ்வளவு நம்பிக்கையோடு தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தனரோ! அதைவிடப் பன்மடங்கு நம்பிக்கையும் பற்றும் விசுவாசமும் மக்களிடம் ஏற்படும் அளவில் பணிசெய்து முடிப்பதிலேயே அவரின் வெற்றி தங்கியுள்ளது.

எனவே வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் நிதானமாக - தமிழ்மக்களின் அபிலாஷைகளை அடைவதற்கானதாக இருப்பது மிகமிக அவசியம்.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுக்க மெழுகாய் உருகிய கோப்பாய் கோமான்



அமரர் வன்னியசிங்கம் அவர்கள் 1911 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி தெல்லிப்பழையில் பிறந்தார். இவரது தந்தையார் வழக்கறிஞரான குமாரசுவாமி ஆவார். வன்னியசிங்கம் சிறந்த தமிழ் அறிஞராகவும் சட்டவல்லுநராகவும் திகழ்ந்தவர். 1946 ஆம் ஆண்டின் இறுதியிலும் 1947 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தந்தை செல்வாவுடன் இணைந்து அன்றைய தலைவரான அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளருக்காக பிரசாரஞ் செய்தார். தேர்தல் அண்மித்த வேளையில் தமிழ்க் காங்கிரசின் அபேட்சகரான தம்பியப்பா மாரடைப்பினால் திடீரென மரணமானார். அத்துடன் பொதுத் தேர்தல் நடைபெற இரண்டு மூன்று கிழமைகளே இருந்த நிலையில் இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு தமிழரசுத் தந்தையின் முயற்சியால் கு.வன்னியசிங்கம் அரசியல் களத்தில் இறங்கி வெற்றி வாகை சூடினார். இவ்வாறு 1947, 1952, 1958 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்ற இவர், 1959 இல் இறக்கும் வரை தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே பாராளுமன்றத்தில் செயற்பட்டார்.

சலுகைக்காக அரசிடம் சரணாகதி அடையாது உரிமைக்காக போராடுவதே தமிழனுக்குரிய ஒரே வழி எனக் கூறி இணைப்பாட்சி அல்லது சமஷ்டி ஆட்சியின் கீழ் உரிமை பெறுவதே எமக்குள்ள வழி எனத் தந்தை அவர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இவ்விடயத்தின் கால்கோள் விழா 13.02. 1949 இல் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முன்றிலில் நடைபெற்றது. இதனைத் தந்தைக்கு உறுதுணையாக நின்று வழிநடத்திய பெருமை அமரர் வன்னியசிங்கத்திற்குத்தான் உண்டு. இவர் இறக்கும் வரை தந்தையோடு கைகோர்த்து நின்று இவ்வியக்கத்தை வளர்த்தார்.

சாத்வீக வழியில் போராடுவதே உகந்த வழி எனக் கண்ட தந்தையும் சகாக்களும் தமிழ் அரசியலில் முன்பில்லாதவாறு சத்தியாக்கிரகம், ஹர்த்தால், சட்டமறுப்பு, ஒத்துழையாமை, சிறைவாசம் போன்ற பதங்களைப் புகுத்தி பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். பாராளுமன்றத்திலும் காத்திரமான உரைகளை நிகழ்த்தினர். பல நாட்கள் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியும் ஏற்பட்டது.

அமரர் அவர்கள் 19.06.1957 இல் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்த போது உரிமைகளுக்காகப் போராடுவது இராசத் துரோகம் என்றால் தூக்குமேடை ஏறவும் தயங்கமாட்டேன் என கூறியிருந்தார்.

## இன்று இவரின் 102 ஆவது பிறந்தநாள்

அமரர் வன்னியசிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் மட்டுமன்றி வெளியிலும் கட்சியின் பணிகளில் தீவிரமாகச் செயற்பட்டார். 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது இதற்கெதிரர்க காலிமுகத்திடலில் வெகுண்டெழுந்து காடையராலும் தாக்கப்பட்டார். 1957 இல் உருவான பண்டா-செல்வா ஒப்பந்தத்தை தயாரித்த பெருமையும் இவருக்கேயுரியது. அத்தோடு ஊரூராகச் சென்று கட்சிக் கிளைகளை அமைத்ததோடு, கட்சியின் கொள்கைகளைக் கேள்விக்குப் பதிலாகப் பரப்பியிருந்தார். இவ்வாறு கடின உழைப்பின் மூலம் உடல் நோய்வாய்ப்பட்ட இவருக்கு இரத்த அழுத்த நோயும் இடதுமார்பு விரிவும் ஏற்பட்டது. இவரது உடல் நிலையைக் கருத்திற் கொண்டு இவரது கட்சியினரால் ஓய்வு எடுக்குமாறு அறிவுரை கூறப்பட்டபோது,

''செய்ய வேண்டிய பணிகள் ஏராளம். செய்து முடிக்கப்பட்டவையோ மிகவும் சொற்பம். நானோ, நீங்களோ எப்படி ஓய்வு எடுக்க முடியும்?நாங்கள் ஓய்வு எடுக்கவேண்டுமென்பது இறைவனின் சித்தமானால் அவர் எங்களது சுமையில் ஒரு பகுதியைத் தாங்கும் பொருட்டு உண்மை ஊழியர்களான இளைஞர்களை எங்கள் மத்தியில் அனுப்புவார். அங்ஙனமின்றி நாங்கள் இவற்றைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்பது இறை வனது சித்தமானால் இலட்சியப் பணியின் சுமையால் நாம் நொடிந்து போவதும் இறைவன் சித்தமே'' என கூறிய இவர் ஒரு வாரத்தின் பின் கடுமையாக நோய்வாய்ப்பட்டார்.

இரத்தக் கொதிப்பினால் பீடிக்கப்பட்ட இவர் திடீரென்று 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி இன்னுயிர் நீத்தார். மதிநுட்பத்தாலும் அப்பழுக்கற்ற தியாகத்தாலும் மெய்வருத்தம் பாரா உழைப்பாலும் இயக்கத்தை வழி நடத்திவந்த வன்னியசிங்கம் அவர்களின் மறைவு கட்சிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அமைந்தது.

தந்தை செல்வநாயகம் அன்று தமிழ் மக்கள் சலுகைக்காக விலை போகக் கூடாது என்றும் உரிமைக்காகவே போராட வேண்டும் என்றும் எடுத்த முடிவுக்கு உறுதுணையாக நின்றவர் கோப்பாய் கோமான் என அழைக்கப்படும் வன்னியசிங்கம் அவர்களே.

இவர்களது அப்பழுக்கற்ற வாழ்க்கை, இலட்சிய வேட்கை ஆகியன கல்வி வேள்விகளில் சிறந்த இளைஞர் சமூகத்தையே பாராளுமன்றத்துக்கு அனுப்ப வழி செய்தது. தந்தையதும் கோமானதும் எதிர்பார்ப்பு வீண் போகாத வண்ணம் பாதுகாத்த பெருமை அன்றைய இளம் பாராளுமன்ற உறுப்பினருக்கே உண்டு.

தேசியம், தாயகம், சுயநிர்ணயம் ஆகிய கோட்பாடுகளை அடுத்த சந்ததியினரான இளைஞர்களிடம் ஒப்படைத்தவரும் இவர்கள்தான்.


இவர்கள் வளர்த்த தேசியம் 1985 இல் திம்புவிலும் 2002 இல் ஒஸ்லோவிலும் சுடர்விட்டது. இதற்கு கால்கோளாக இருந்து வளர்த்தெடுத்த தந்தை செல்வநாயகம், கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், தலைவர் அமிர்தலிங்கம் ஆகியோரை நன்றிக் கடனுடன் நினைவு கூருவது நமது தலையான கடமையாகும்.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**(சிரேஷ்ட துணைத் தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி)**

பாராட்டி வாழ்த்துகின்றோம்



சு.சுகிர்தா (கலை) வி.சரன்ஜன் (வர்த்தகம்) செ.தர்மிகா (கலை) சி.அவர்ணா (கலை) ந.மேனகன் (வர்த்தகம்)



அ.நிவேதா(கலை) இ.ஜெசிகா (கலை) ம.அர்ச்சனா (கலை) த.மேகலா (கலை) த.துஸ்மிகா (கலை)

(சி/5130)

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்கும் கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவான எமது மாணவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/பூநகரி மகா வித்தியாலயம், பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ!
– திருவிளையாடல் புராணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் தமிழரின் அரசு சத்தியப்பிரமாணம் செய்யும் வேளையில்...

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொள்கின்றனர்.

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு மிதக்கும் பலகைத் துண்டு ஒன்று கிடைப்பதென்பது அவரின் நீச்சல் போராட்டத்திற்கு உதவியாக அமையுமல்லவா? இது போன்றதுதான் வடக்கு மாகாண சபை.

ஒரு நாட்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பில் தங்களின் உயிர்களையும் உடைமைகளையும் வாழ்விடங்களையும் இழந்து தவித்த தமிழ் மக்கள் ஒரு ஊன்று கோல் இருந்தால், அதைப்பிடித்து எழுந்து தலைநிமிர்ந்து நிற்கலாம் என்று எண்ணிக் கொண்ட வேளையில், வடக்குமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டி ஆட்சியைப் பிடித்துக் கொண்டது.

மாகாண சபை நிர்வாகத்தால் எதுவும் செய்ய முடியாது என்று யாரேனும் சொல்வார்களாக இருந்தால் அது மிகப்பெரும் தவறு.

மாகாண சபையாலும் சாதிக்க முடியும்.

தமிழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்றமுடியும். அந்த செயற்றிட்டம் மாகாண சபைக்குரிய யாப்புகளில் அல்ல, அது மாகாண சபையின் முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்களின் மனங்களிலும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையிலுமே தங்கியுள்ளது.

அன்புக்குரிய வடக்கின் மாகாண முதலமைச்சர் அவர்களே! கௌரவத்துக்குரிய அமைச்சர்களே! உறுப்பினர்களே! உங்களை நம்பி தமிழ் மக்கள் தங்களின் ஆட்சியாளரை தந்துள்ளனர் என்ற உண்மையை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

எங்களை நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை புரிவோம் என்று இந்த வேளையில் சத்தியம் செய்து கொள்ளுங்கள்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களாக நீங்கள் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு முன்னதாகத் தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபியில் மலர் அஞ்சலி செலுத்தவுள்ளீர்கள்.

அந்த அஞ்சலியின்போது தந்தை செல்வநாயகத்தின் நேர்மை, அவரின் அர்ப்பணிப்பு, தியாகம், அமைதி, ஆழ்ந்த அறிவு என்பன பற்றி ஒருகணம் சிந்தியுங்கள்.

தந்தை என்ற நாமம் அவரின் தூய்மையான கைகளுக்கானது. தனது சொத்தை தமிழ் அரசியலுக்காக அர்ப்பணித்தவர் என்பதாலும் தந்தை என்ற நாமத்துக்கு எவராலும் தீங்கிழைக்க முடியவில்லை.

அந்த உத்தமரின் நினைவுத் தூபிக்கு நீங்கள் மலர் அஞ்சலி செலுத்தும் போது; நாங்கள் நேர்மையாக நடப்போம். ஊழல், செல்வாக்கு, பக்கசார்பு, பழிவாங்கல் என்பவற்றுக்கு இம்மியும் இடம் கொடோம். தமிழர்களின் உரிமை என்ற இலக்கை ஒரு போதும் கைவிடோம். எங்களின் பணியானது எந்தச்சந்தர்ப்பத்திலும் அடுத்த தேர்தலில் எனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்ற சுயநல நோக்கத்தைக் கொண்டதாக இருக்காது.

நான் என் பணியை தூய்மையாக செய்தால் நிச்சயம் தமிழ் மக்கள் அதற்குப் பெருமதிப்புத் தருவார்கள் என்ற உண்மையை நான் உணர்ந்துள்ளேன் என்றவாறு சத்தியம் செய்யுங்கள்.

அந்த சத்தியத்தோடு கொழும்பு, வெளிநாட்டு சுற்றுலா என்றில்லாமல் வடபகுதியில் குந்தியிருந்து என் அருமந்த தமிழ் மக்களுக்கு சேவை செய்வேன் இது சத்தியம் என்றும் ஒருமுறை கூறிக்கொள்ளுங்கள்.

இவ்வாறு கூறும் போது உங்கள் கண்களிலிருந்து நிச்சயம் நீர்த்துளிகள் சிந்தி மண்ணில் விழுந்து கொள்ளும்.

இது எங்கள் துயரங்களுக்கான அடையாளம் மட்டுமல்ல ; ஊழல் அற்ற – மாலை மரியாதை என்ற படோபகாரமற்ற தூய பணியை செய்வதற்கு தமிழ் அன்னை மீது நீங்கள் செய்யும் சத்தியத்தின் அடையாளமாகவும் அமையும்.

# இலங்கை மீனவர்கள் 26 பேர் கைது

இலங்கை மீனவர்கள் 26 பேர் இந்திய கடலோர காவல் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி தூத்துக்குடி கடற்பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மீனவர்கள் கன்னியாகுமரிக்கு தென் கிழக்கில் தூத்துக்குடி கடற்பரப்பில் 80 கடல் மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தாகக் கூறப்படுகிறது.

மீனவர்களின் நான்கு படகுகளும் இந்திய கடலோர காவல் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் தூத்துக்குடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தமிழக பொலிஸாரிடம் கையளிக்கப்பட உள்ளனர். (எ-11)

# ஜனாதிபதி விரித்த வலையில் கூட்டமைப்பு விழுந்துவிட்டதாக நினைத்தால் அது முட்டாள்தனம்

## தே.ஐ. முன்னணி தலைவர் அசாத் சாலி தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பத்தை ஏற்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கு ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்து வைத்தமையானது அரசாங்கம் செய்த மிகச்சிறந்ததொரு அரசியல் நடவடிக்கையாகும்.

வடக்கு மக்களின் உணர்வுகளைப் புரிந்து அரசாங்கம் செயற்படுமானால் அதை நாம் வரவேற்கின்றோம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரனும் சம்பந்தனும் ஜனாதிபதி விரித்த வலையில் விழுந்துவிட்டார்கள் என பிரிவினைவாதிகள் நினைப்பார்களாயின் அது அவர்களின் முட்டாள்தனமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அசாத் சாலி தொடர்ந்தும் தெரிவிக்கையில், சி.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தமையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக செயற்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதேபோல் அரசாங்கம் இந்த கால கட்டங்களில் செய்த மிகச்சிறந்த அரசியல் செயற்பாடும் இதுவாகும்.

அதேபோன்று வடக்கு மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து அரசாங்கம் செயற்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் இடமளித்து வடக்கு மக்களின் உரிமைகளை அங்கீகரித்து தடைகளின்றி அவர்களை செயற்படவிட்டால் அதை அனைவரும வரவேற்பார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடபகுதி மக்களுக்காக அரசுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட முன்வந்துள்ளதைப் போன்று அரசாங்கமும் கூட்டமைப்புடன் இணைந்து புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்புடன் வடக்கு வாழ் மக்களின் வாழ்க்கைக்காக அவர்களை சூழ்ந்துள்ள இருளை துடைத்தெறிய முன்வர வேண்டும்.

அதேபோன்று இன்று அமைச்சர்களின் பாதுகாவலர்களும் இணைப்பாளர்களும் கடத்தப்படும் நிலைக்கு நாட்டின் சட்டமும் பாதுகாப்பும் சீர்குலைந்துள்ளன. நாட்டில் பொலிஸ் பாதுகாப்பு இருந்தும் அவற்றில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்ற நிலைமையே இன்று காணப்படுகின்றது. இதனால்தான் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழு மற்றும் 17 -வது சீர்திருத்தம் என்பவற்றை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# கனகபுரத்தில் ஊடகச் செயலமர்வு

(கிளிநொச்சி)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் கிளிநொச்சி, முல்லை த்தீவு ஊடகவியலாளர்களுக்கு ஊடக செயலமர்வு நாளை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள நண்பர்கள் விடுதியில் நடைபெறவுள்ளது.

செய்தி மற்றும் தகவல் சேகரித்தல், பத்திரிகைதுறை சார் ஒழுக்கநெறிக் கோவை ஆகிய விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகைத் துறையினருக்கு கட்டுப்பாடு ஒழுக்கக்கோவை தொடர்பாக கலந்துரையாடுவதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கும் இணைப்பை பலப்படுத்துவதும் ஊடாக செயற்பாட்டில் தவறுகள் இடம்பெறுவதை தடுக்கும் நோக்கில் இந்த வழிகாட்டல் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது. (ம-254)




### நடுநிலை கொள்கை

இறைவன் கூறுகிறான்: "(உலக வாழ்வை உதறிச் செல்லும்) துறவித்தனத்தை நாம் அவர்களுக்கு விதியாக்கவே இல்லை..."

(திருக்குர் ஆன் 57:27)

அதேசமயம் இறைவனை மறந்து உல்லாச வாழ்க்கையில் மூழ்கிவிடக் கூடாது. "அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக இவ்வுலக வாழ்வு வெறும் விளையாட்டும் வேடிக்கையும் அலங்காரமும்தான்!"

(திருக்குர் ஆன் 57:20)




மணிவாசகர் தனது பக்தியனுபவத்தைப் பாடிய பாடல்களில் நீத்தல் விண்ணம் என்னும் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் அவருடைய வாழ்வியலைப் பற்றிய பல செய்திகளைத் தந்துள்ளன. வாழ்க்கையில் வழிபாடு மனப்பக்குவத்தைத் தரவல்லது. அந்தப் பக்குவம் தான் பக்திநிலையாக இறைவன் பற்றிய எண்ணம் உறுதிபெறும். நெருங்கிப் பேசும் உணர்வு தோன்றும். ஏனைய உறவுகளைவிட மிக நெருக்கமான உறவாக இறைவனை எண்ணும் பக்குவம் ஏற்படும். அத்தகைய பக்குவம் மணிவாசகருடைய வாழ்வில் ஏற்பட்ட போது அவர் பாடலில் அந்த மாற்றம் தெளிவாகவே பதிவு செய்யப்பட்டது.

இறைவனை மிக நெருக்கமான நிலையின்று வருமாறு ஏசுவேன் என்று கூறுகிறார். நீ மிகவும் கோபம் கொண்டு ஒறுக்கத்தக்க எனது பெரிய குற்றத்தினை நீ சிரித்துப் பொறுத்துக் கொள்ளுமாறு செய்வேன். எனது தொண்டுப் பணியையும் இறைவனாகிய நினக்கே உரியது என்று கூறி அதனை எங்கும் பரவும்படி செய்வேன். என்னை நீ கைவிடாது ஏற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளாவிட்டால் [illegible] என்னும் யானையின் தோலைப் போர்த்த பித்தன், புலித்தோலை உடையாகக் கொண்ட பித்தன், ஆலகாலம் என்னும் கொடியநஞ்சைஉண்டபித்தன், ஊருக்குப் பொதுவாகிய சுடுகாட்டுத்தீயிலே திருக் கரத்திலே எரிதாங்கி ஆடும்பித்தன், ஒன்றுக்கும் உதவாத என்னையும் ஆட்கொண்டருளிய பித்தன் என்பேன்.

இறைவனுடைய செயல்களென அவர் குறிப்பிடுவன உலகில் பித்தருடைய செயற்பாடுகளாகும். பித்தர்கள் உடையும் ஊணும் உறைவிடமும் செயலும் சாதாரண மக்களிலிருந்தும் வேறுபட்டவையாகும். அந்த வகையில் யானைத்தோல் போர்வையும் புலித்தோல் உடையும் நஞ்சு உணவும் சுடுகாட்டிடமும் எரி ஏந்தி நிற்கும் செயலும் அத்தகையவை என மணிவாசகர் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் இச்செயற்பாடுகள் அனைத்தும் இறைவனுடைய எல்லையில்லாத ஆற்றலையும் பேரருளையும் விளக்கி நிற்பன. எனவே இவ்வாறு கூறுவது இறைவனைப் பழிப்பது போலப் புகழ்ந்துரைத்தலாகும். வடமொழியில் இதனை நிந்தாஸ் துதி என்பர். சுந்தரரும் இவ்வாறு இறைவன் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். இறைவனது வீடுபேற்றை விரும்பியவர்கள் இறைவனைப் பலவகையிற் புகழ்ந்தும் பழிப்பதுபோல் புகழ்ந்தும் பல பாடல்கள் பாடியுள்ளனர். மணிவாசகர் பிச்சன் என்ற சொல்லை ஒரு பாடலில் 5 முறை பயன்படுத்தியுள்ளார். இது அவருடைய மொழிப் பயன்பாட்டு நிலையை நன்கு விளக்கி நிற்கிறது. விரிப்பிப்பன் என அவர் பயன் படுத்திய சொல் அத்தகையது. ஒரு விட யத்தைச் சிலருக்குக்கூறி அவர் மூலம் மேலும் பலர் அறியும்படி செய்தல். அது எங்கும்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பரவுவதையே விரித்தல் என்ற சொல் குறித்து நிற்கிறது. இதனால் இறைவன் புகழ் குன்றும். அடியவர்களைப் பற்றிய எண்ணமில்லாத பித்தன் என்ற கருத்தே எங்கும் பரவும். அது நினக்கு ஏற்றதல்ல என்று கூறுகிறார். பித்தரைக் கண்டால் எல்லோரும் சிரிப்பர். அத்தகையநிலைஉலகவாழ்க்கையில்உண்டு. அதனை மணிவாசகர் நினைவிற் கொண்டு இறைவனையும் அந்நிலைக்கு ஆளாக்குவேன் என்கிறார்.

**சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்**
**தொழும்பையு மீசற்கென்று**
**விரிப்பிப்பன் என்னை விடுதி கண்டாய்**
**விடின் வெங்கரியின்**
**உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன்**
**நஞ்சு ஊண் பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு**
**எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்**
**பிச்ச னென்று ஏசுவனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயை மெச்சும் பிரட்லி



உலக மின்னல் வேக ஓட்டவீரன் ஜமைக்காவின் உசைன் போல்ட்டை விட, எனது ஆறுமாத நாய்க்குட்டி வேகமாக ஓடுகிறது, என, பிரட் லீ தெரிவித்துள்ளார்.


அவுஸ்திரேலியாவின் முன்னாள் புயல் வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீ, வயது - 36. டில்லியில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்ற இவர் கூறுகையில்,

எனது வீட்டில் 'ஜிஞ்சர்' எனும் நாய்க்குட்டி வளர்த்து வருகிறேன். ஆறு மாதம் மட்டுமே ஆகும் இந்த குட்டி, வீட்டின் அனைத்து இடங்களிலும் துள்ளிக் குதித்து கொண்டிருக்கும்.

எப்போதும் கால்களை சுற்றியே வரும், இது உசைன் போல்ட் போல வேகமாக ஓடும். 'ருவென்ரி-20' போட்டிகளில் பங்கேற்பதற்கு ஏற்ப, எனது உடற்தகுதி சரியாக உள்ளது என்றால் இதற்கு 'ஜிஞ்சர்' தான் காரணம். தவிர, முயல்கள், எலிகள் மற்றும் அனைத்து வகையான பறவை இனங்களும் வளர்த்து வருகிறேன்.

# சம்பியன் சிப் போட்டிகளில் இருந்து ஆன்டி முர்ரே விலகல்

அடுத்த மாதம் நடைபெற உள்ள ஏடிபி சம்பியன்ஸ் சிப் டெனிஸ் போட்டியிலிருந்து



பிரிட்டனைச்சேர்ந்த ஆன்டி முர்ரே விலகியுள்ளார்.

கடந்த மாதம் மேற்கொண்ட அறுவை சிகிச்சையிலிருந்து மீண்டு வருவதால் இப் போட்டியில் அவர் பங்கேற்கவில்லை.

டெனிஸ் தரவரிசையில் முதல் 8 இடங்களுக்குள் உள்ள வீரர்களுக்கு இடையே ஆண்டு தோறும் இப்போட்டி நடைபெற்று வருகிறது. 2013ஆம் ஆண்டுக்கான சம்பியன் சிப் டெனிஸ் பிரிட்டனில் அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் விளையாட, தர வரிசையின் அடிப்படையில் ரஃபேல் நடால், நோவக் ஜோகோவிச், முர்ரே, டேவிட் ஃபெரர் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில், இப்போட்டியில் 2 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ள முர்ரே, போட்டியிலிருந்து விலகியுள்ளார். இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

என் சொந்த நாட்டு மக்களின் முன் விளையாடுவது, சிறந்தது. ஆனால், சம்பியன் சிப் போட்டியில் இந்த ஆண்டு விளையாடாதது, மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இப்போட்டியில் வெற்றி பெற அனைத்து வீரர்களும் கடுமையான முயன்று வருகின்றனர். அடுத்த ஆண்டு இப்போட்டிக்குத் தகுதி பெறுவதற்கு, முடிந்த வரை முயல்வேன் என்று தெரிவித்தார்.

இப்போட்டியில் விளையாட டெல் போட்ரோ, தாமஸ் பெர்டிச் ஆகியோர் விரைவில் தகுதி பெறுவர் என்று தெரிகிறது.

அதேசமயம் ரோஜர் ஃபெடரர், வாவ்ரிங்கா மற்றும் ரிச்சார்டு கேஸ்கே ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். தற்போது முர்ரே விலகியுள்ள நிலையில், இவர்களும் தகுதி பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், வரும் காலங்களில் நடைபெறும் போட்டிகளின் முடிவுகளைத் தொடர்ந்து ரயோனிக் மற்றும் சோங்கோ ஆகியோர் முன்னிலை பெற வாய்ப்புள்ளது.


# ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய கனிஷ்ட அணிக்கு 2 தங்கம்

ஆசிய துப்பாக்கி சுடுதல் சம்பியன்ஷிப் தொடரில் அணிகள் சார்பில் இடம்பெற்ற போட்டியில் இந்திய கனிஸ்ட பிரிவு அணி பதக்கங்களை வென்று அசத்தியது.

கஜகஸ்தானில் உள்ள அல்மாட்டி நகரில் ஆசிய துப்பாக்கி சுடுதல் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பாக 2 தங்கம் உட்பட மொத்தம் 7 பதக்கங்கள் வெற்றிகொள்ளப்பட்டன.

# ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய டில்லி வீரருக்கு 18 மாதம் தடை



ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய டில்லி வீரர் பிரதீப் சங்வானுக்கு, 18 மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

டில்லி அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரதீப் சங்வான், வயது - 22. கடந்த 2008 இல் நடைபெற்ற 19வயதுக்குட்பட்ட உலக கிண்ணத்தொடரில், இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார். கடந்த 2008 முதல்2010 வரை டில்லி அணிக்காக 38 முதல்தர போட்டிகளில், 123 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

பிறிமியர் கிரிக்கெட் தொடரில், கொல்கத்தா (2011 முதல்) அணிக்காக விளையாடிய இவர், ஆறாவது சீசனில், இரு போட்டிகளில் (பெங்களூர், ஐதராபாத்) பங்கேற்றார். இதில் விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை.

**ஊக்கமருந்து சோதனை**

இதனிடையே, இந்திய கிரிக்கெட் சபை சார்பில் (பி.சி.சி.ஐ.,) இத்தொடரில் வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதில் தடைசெய்யப்பட்ட "ஸ்டானோஜோலல்" என்ற ஊக்கமருந்தை சங்வான் பயன்படுத்தியது தெரியவந்தது. இதை பி.சி.சி.ஐ., நியமித்த சுவீடனை சேர்ந்த மூன்று பேர் கொண்ட குழு உறுதி செய்தது. இதனால், சர்வதேச ஊக்கமருந்து சோதனை மற்றும் தீர்ப்பாய நிர்வாகம், சங்வானுக்கு 18 மாதம் தடை விதித்தது.

இந்த தடை 2014, ஒக். மாதம் வரை அமுலில் இருக்கும். இதனால், இடைப்பட்ட காலத்தில் பி.சி.சி.ஐ., அல்லது டில்லி அணி சார்பில் நடத்தப்படும் எவ்வித போட்டிகளிலும் பங்கேற்க முடியாது.

**இரண்டாவது வீரர்**


பிறிரிமியர் தொடரில் பங்கேற்று, ஊக்கமருந்து சர்ச்சையில் தண்டனை பெற்ற இரண்டாவது வீரர் பிரதீப் சங்வான், இதற்கு முன், முதல் தொடரில் (2008) டில்லி அணியில் விளையாடிய முகமது ஆசிப், பாகிஸ்தான் திரும்பும்போது, சட்ட விரோதமாக போதைப் பொருள் வைத்திருந்து, டுபாயில் பிடிபட்டு, தண்டனை பெற்றார்.

# முதல் டெஸ்டில் வலுவான நிலையை நோக்கி நியூசிலாந்து

பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்டில், வில்லியம்சன் சதம் அடித்து கைகொடுக்க, நியூசிலாந்து அணி வலுவான நிலையை நோக்கி முன்னேறுகிறது.

பங்களாதேஸ் வந்துள்ள நியூசிலாந்து அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட், சிட்டகாங்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம், துடுப் பாட்டத்தை தேர்வு செய்தார்.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணிக்கு ஹமிஷ் ரூதர்போர்டு (34) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். பின் இணைந்த பீட்டர் புல்டன், வில்லியம்சன் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. பொறுப்பாக ஆடிய புல்டன், அரைசதம் அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்கு 126 ஓட்டங்கள் சேர்த்தபோது, புல்டன் (73) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரொஸ் ரெய்லர் (28) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய வில்லியம் சன், டெஸ்ட் அரங்கில் தனது 4ஆவது சதமடித்தார். இவர், 114 ஓட்டங்கள் எடுத்த போது சாகிப் அல் ஹசன் 'சுழலில்' சிக்கினார். அணித தலைவர் பிரண்டன் மெக்கலம் (21) சோபிக்கவில்லை.



முதல் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுக்கு 280 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பங்களாதேஸ் சார்பில் அப்துர் ரசாக் 2, சோகாக் காஜி, சாகிப் அல் ஹசன், நாசிர் ஹொசைன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா அபார வெற்றி



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரே ஒரு 20 ஓவர் போட்டி மற்றும் 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் 20 ஓவர் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் நேற்று மாலை நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் கப்டன் தோனி, பந்துவீச முடிவு செய்தார். முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் துவக்க வீரர்கள் அதிரடியாக ஆடியதால் ஓட்ட எண்ணிக்கை விறுவிறுவென ஏறியது.

அரை சதம் கடந்து அபாரமாக ஆடிக் கொண்டிருந்த ஆரோன் பின்ச், 89 ரன்கள் குவித்தார். அவரது விக்கெட்டை வினய் குமார் கைப்பற்றினார். இதனால ஆஸி அணி 20 ஓவர் முடிவில், 7 விக்கெட் இழப்பிற்கு 201 ரன்கள் எடுத்தது.

இந்தியா தரப்பில் புவனேஸ்குமார், வினய் குமார் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் எடுத்தனர். ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட் கைப்பற்றினார்.

இதையடுத்து 202 ரன்கள் என்ற இலக்கை நோக்கி இந்திய அணியில் சர்மா மற்றும் தவான் களம் இறங்கினர்.

ஆட்டத்தின் 2வது ஓவரில் சர்மா 8 ரன்னில் ஆட்டம் இழந்தார். அடுத்த விக்கெட்டுக்கு தவானுடன் ஜோடி சேர ரெய்னா களம் இறங்கினார். இவர் 19 ரன்னில் அவுட் ஆனார். மறு முனையில் சிறப்பாக விளையாடி கொண்டிருந்த தவான் 32 ரன்கள் எடுத்த நிலையில் அவுட ஆனார். அடுத்து களம் இறங்கிய கோலி 29 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

5 வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த யுவராஜ் சிங் மற்றும் தோனி, அணியின் ஸ்கோரை வெகுவாக உயர்த்தினர். யுவராஜ் சிங் அதிரடியாக விளையாடி அரை சதம் கடந்தார்.

இறுதியில் இந்தியா 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 202 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

யுவராஜ் சிங் 35 பந்துகளில் 77 ரன்னும், தோனி 21 பந்தில் 24 ரன்னும் எடுத்தனர்.

# நிபுணத்துவத்தின் ...

சபையின் பிரதி தவிசாளர் அன்ரன் ஜெயநாதன்(இ.த.அ. கட்சி- முல்லைத்தீவு),

முதலமைச்சர் -நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்(பொது வேட்பாளர்-யாழ்ப்பாணம்)

வேளாண்மை, கால்நடை, நீர்ப்பாசனம் சூழல் அமைச்சர் -பொ.ஐங்கரநேசன் (ஈபிஆர்எல்எப் -யாழ்ப்பாணம்),

கல்வி, கலாசார அமைச்சர் தி.குருகுலராஜா (இ.த.அ.கட்சி - கிளிநொச்சி)

சுகாதார அமைச்சர் -வைத்திய கலாநிதி பி.சத்தியலிங்கம் (இ.த.அ.கட்சி வவுனியா),

மீன்பிடி,போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் (ரெலோ மன்னார்) கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர்களின் விபரம் வருமாறு;

இலங்கை த.அ.கட்சி 14, ஈ.பி.ஆர்.எல்.எப்-06, ரெலோ 05; புளொட் -02, ரி.யு.எல்.எப்-01, நல்லாட்சிகான மக்கள் இயக்கம்-01, பொது வேட்பாளர் -01 என மொத்தம் 30 உறுப்பினர்கள்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாவிடினும் பிரதி தவிசாளர் பதவியில் இருக்கும் அன்ரன் ஜெயநாதனுக்கு முக்கியமான துறைப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக உறுப்பினராக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள அயுப் அஸ்மீனுக்கும் அப் பொறுப்புக்களில் குறிப்பிட்ட விடயங்களில் பங்கேற்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் முதலமைச்சருடன் சேர்ந்து கடமையாற்றுவார்கள். முல்லைத்தீவு மாவட்டம் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்பது கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவிகள் மீள் பரிசீலனை செய்யப்படும்போது முல்லைத் தீவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதானது முன்னுரிமை பெறும்.

வட மாகாண சபை மற்றைய மாகாண சபைகளுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்பது எனது விருப்பம். இனியாவது கட்சி பேதங்களை மறந்து, வன்முறைகளைத் களைந்து, ஜனநாயக அடிப்படையில் பாதிப்புற்றிருக்கும் எம் மக்களின் இடர் களையப் பாடுபடுவோமாக என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)







# மரண அறிவித்தல்

## திருமதி லோகரூபி சுரேஸ்குமார்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு காரைக்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகரூபி சுரேஸ் குமார் நேற்று (10.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சபாரட்ணம் - சீதாலக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், அப்புத்துரை -சரோஜினிதேவி தம்பதியரின் மருமகளும், சுரேஸ்குமாரின் அன்பு மனைவியும்.

மோகனதாஸ்(மோகன்-புத்தளம்), குகனதாஸ்( குகன்- கோண்டாவில்), கௌரி( கனடா), கமலதாஸ்(புத்தளம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகுமார்(சுவிஸ்), சுகந்தன்( லண்டன்), அன்புக்கரசி (நோர்வே), நிரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் கிழக்கு,
காரைக்கால்.

தகவல்: சுரேஸ்குமார்
(கணவர்)

(சி-5147)



## அலுவலக உதவியாளர் தேவை

யாழ்.வணிகர் கழக அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் (PEON) தேவை.விண்ணப்பங்கள் 25.10.2013 திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். (நேரடியாக கையளிக்கலாம்)

இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். -யாழ்.வணிகர் கழகம்

(சி-5139)





பாராட்டி வாழ்த்துகின்றோம்

கௌதமி வெதுப்பக பணியாளர் சிறீஸ்கந்தராசா அவர்களின் மகளும் யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை மாணவியுமாகிய

## சி. பபிதா

(159 புள்ளிகள்)

அவர்கள் 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் 3-ம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரை பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

AP லேன் முஸ்லிம் தெரு
யாழ்ப்பாணம்.

(C-5028)

கௌதமி வெதுப்பக உரிமையாளரும் பணியாளர்களும்.



## சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பமும்

## KISD PARK PRE SCHOOL & DAY CARE CENTRE

528, Palaly Road, Thirunelvely. 0776456974



திருமதி கர்ணி தனபாலன்
(பணிப்பாளர்)
Dip in Pre School Ed
(Distinction)
PG - Guidance & Counselling
1st Class,

அன்பானவர்களே!

எனது குடும்பத்தைப் போல எமது முன்பள்ளியும் மிக அழகானது நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற வகையில்....

- மகிழ்ச்சிகரமான, மிகப்பாதுகாப்பான வீட்டுச் சூழலுடன் ஓர் இலட்சிய முன்பள்ளிப் பாடசாலை அமைப்பு!
- பெற்றோர்களாகவே ஆசிரியர்களாகிய நாம் மாறி உங்கள் குழந்தைச் செல்வங்களை அரவணைத்து சுதந்திரமான விளையாட்டு மூலமாக கற்றல்அனுபவங்களை வழங்குகின்றோம்.

"களிமண் பிசைவிலிருந்து கணனி கற்கை வரை"

2+ Play Group, 3+ Montessori, 4+ Pre School

2014ஆம் ஆண்டு புதிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 14.10.2013 காலை 8.30 மணிக்கு விஜயதசமி அன்று ஏடு தொடக்கல் நிகழ்வு ஆரம்பம்.

அனேக வேலை செய்யும் பெற்றோர்களின் வேண்டுதலுக்கு இணங்க காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை எம் முன்பள்ளியில் குழந்தைகள் காப்பகம் இயங்குகின்றது. உங்கள் குழந்தைகள் உண்டு - உறங்கி - விளையாடி [illegible]




"கல்விப் பணியே கடவுள் பணி"

நிபுணத்துவ ஆலோசகர் திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(Cey), PGDE (Merit), Dip in Pre School Ed, Distinction)
M.Phil in pre School Education, Dip in Psy 1st Class
Cert in Vocational Guidance (Singapore)

(4138)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்...

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் பரிந்துரைக் கப்பட்டு தமிழரசுக் கட்சியின் சின்ன மான வீட்டுச் சின்னத்தில் யாழ்ப்பா ணத்தில் போட்டியிட்டு வட மாகாண சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பொ.ஐங்கரநேசன் என் பவர்தனிப்பட்ட முறையில்வட மாகாண சபைக்கான அமைச்சுப் பதவி யைப் பெற்றதன் காரணமாகவும் தனக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணிக்கும் இனி எவ்வி தத் தொடர்பும் இல்லை என்றும் இந்த அமைச்சுப் பதவியானது தமிழர சுக் கட்சியினுடைய தலைமையின் பரிந்துரையின் பேரில், முதலமைச் சரினால் தனக்குத் தனிப்பட்டரீதி யில் வழங்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். அதுவே உண்மையு மாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயக மான என்னுடன் பொ.ஐங்கரநே சனுக்கு அமைச்சுப் பதவி வழங்கு வது தொடர்பாக தமிழரசுக் கட்சியோ முதலமைச்சரோ எவ்விதக் கருத் துப் பரிமாற்றங்களையும் மேற் கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஒரு அமைச்சுப் பதவியை நீங்கள் வழங்க விரும் பினால் அதனை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வழங்குமாறு நான் கோரியிருந்தபோதிலும் என்னு டன் எவ்விதக் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படாமல்முடிவெடுக்கப் பட்டுள்ளது.

எனவே ஐங்கரநேசன் தெரிவித் துள்ளபடி, அவருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும எதிர்காலத்தில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெளிவுபடுத்துவதுடன் அவர் கூறியது போன்றே அவருக்குக் கொடுக்கப் பட்ட அமைச்சுப் பொறுப்பானது தனிப பட்ட முறையில் அவருக்கு வழங்கப் பட்டதென்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்து ஆறு ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணிக்கு எந்த விதமான அமைச்சுப் பதவியும் வழங்கப்படவில்லை என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன். எதிர்காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஓர் அமைச்சுப் பதவியை வழங்கி யதாக தவறானதும் பொய்யான துமான பரப்புரைகளைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள் வதுடன் செய்ய மாட்டீர்கள் என்றும நம்புகின்றேன் என்றுள்ளது. (எ-11)


## வேலை வாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

**யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள் 40 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

பயிற்சியின் போது : 15,000/- பின் 50,000/-

இன்று அழையுங்கள் நாளை இணையுங்கள்
077 798 1471, 077 55 66 224

தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம் (4149)

## யாழ்ப்பாண விவசாயிக்களுக்கு நற்செய்தி

எமக்கு தரமான தக்காளி (100 கிலோ) மற்றும் கத்தரிக் காய் (50 கிலோ) தினமும் பகல் 12.00 மணிக்கு கிளி நொச்சி பஸ்தரிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கொடுப்பனவு ஆர்டிபி வங்கி ஊடாக 24 மணித்தியாலத்திற்குள் செலுத்தப்படும்.

உங்களுக்கு ஆர்வம் இருப்பின், தயவு செய்து **077-7377813** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உரையாடவும். (சி-5141)

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

**Opening Ceremony of Oral and Dental Clinic and Capping Ceremony**

ஒக்ரோபர் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு **வாய், பல் சிகிச்சை நிலையத் திறப்பு விழாவும்** அதைத் தொடர்ந்து **தாதிய உத்தியோகத்தர்கள் Capping Ceremony**யும் நடைபெறும்.

தென்னிந்திய திருச்சபை பேராயர்
அதி.வணக்கத்துக்குரிய
**Daniel S.Thiragarajah Ph.D** அவர்களும்
அவர்தம் பாரியார், **Dr. Mrs. தயாளினி தியாகராஜா**
அவர்களும் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு
இவ் வைபவத்தை சிறப்பித்து ஆசீர்வதிப்பார்கள்.
அன்பர்கள், நலன் விரும்பிகள் யாவரும் வருகை தந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

**Dr. V.David Retnanathan**
**Medical Superintendent**
**Green Memorial Hospital and Mc Leod Hospital**
**T.P.: 0776171451**

(சி-5132)

யாழ்.மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

**Jaffna District**
**Master Bakers Association**

### லொறி ஏல விற்பனை

எமது சங்கத்தின் பாவனையிலுள்ள கீழே உள்ள விபரப்படியான லொறிகள் 2013.10.24ந் திகதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த லொறிகளை கொள்வனவு செய்பவர்களுக்கு எமது சங்கத்தின் பேக்கரிகளுக்கான மா விநியோகம் (மா ஏற்றி இறக்கும் பணி) நிபந்தனை அடிப்படையில் குறித்த காலத்துக்கு வழங்கப்படும். லொறியை கொள்வனவு செய்ய விரும்புவோர் லொறிகளை 11.10.2013 முதல் 19.10.2013 வரை எமது அலுவலகத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவுள்ள லொறிகளின் விபரங்கள்:

1. அசோக் லேடன் 227-3792
2. ISUSU 42-1869

முக்கியகுறிப்பு: மேலும்விபரங்களை அறிந்துகொள்வதற்கு அலுவலகத்தில் தலைவர்/செயலாளர் அவர்களை காலை 10.00 மணி தொடக்கம் 2.00 மணி வரை சந்திக்கவும். (0212223814)

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நெறியாளர் குழு கட்டளைப்படி
கா.பாஸ்கரன்,
செயலாளர்.

(சி-5137)


# ஆர்ப்பாட்ட...

இடங்களில் போராட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளுக்கான பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அதிகாரங் கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (எ-11)

# மாகாணசபை...

மாகாண சபை உறுப்பினர்கள் 29 பேரும் வடக்குமாகாண சபை முதல மைச்சர்கள் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிகளினை ஏற்கவுள்ளனர்.

இதனையடுத்து 4அமைச்சர்களும் தவிசாளர் ஒருவரும் அவைத் தலைவர் களின் பதவியேற்பு நிகழ்வும் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் வடக்குமாகாண சபை திணைக்கள அதிகாரிகள் அமைச்சுக் களின்செயலாளர்கள் உட்பட பல அதிகாரி களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-4)


## தவறிவிட்டது

611933282V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கும் சேவியர் கடைச் சந்திக்கும் இடையில் நேற்றுத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0771005859 / 0778950821 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-5147)

## PHYSICS
## ENGLISH MEDIUM
**By V.M. KARUNA**

2014 A/L - FIELDS
2015 A/L - Hydraustatics
SAT, SUN , 10.30 AM
APtech - Clock Tower Road, Jaffna.
(Near Science Corner)
T.P : 0776183064
(4147)
**Best - Methodology**


# நிபுணத்துவத்தின் அடி...

எமது மக்களின் நம்பிக்கையை நடைமுறைப்படுத்தும் வண்ணம் இவற்றையே அத்திபாரமாகக் கொண்டு தேர்வு நடைபெற்றுள் ளது.

எதிர்க்கட்சியாக இதுவரை காலமாக இருந்து தற்போது ஆட் சியில் ஈடுபட அமைதி அளிக்கப் பட்டுள்ள நாம் எமது நோக்குகளில் அடிப்படை வித்தியாசத்தைக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக் கின்றோம்.

அத்துடன் மக்கள் எமக்களித்த ஆணையை நிறைவேற்ற வேண் டிய கடப்பாட்டையும் கொண்டுள் ளோம்.

எனினும் குறிப்பிட்ட அளவு அமைச்சர்களையே சட்டப்படி நாங் கள் நியமிக்க வேண்டியிருந்தது. பலருக்குத் தகைமையிருந்தும் சிலருக்கே அமைச்சுப் பதவிகள் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

அப்படியிருந்தும் பிரதேச பிரதி நிதித்துவம், கட்சியடிப்படை, நிர் வாகப்பொறுப்புக்களின் அந்நியோன் யம் ஆகியனவும் கருத்தில் எடுக் கப்பட்டன.

மக்களின் ஆதரவைப்பெற்ற கட்சிகளுக்கு உரிய முன்னுரிமை யும் அளிக்கப்பட்டது. இவ்வாறான அடிப்படையிலேயே அமைச்சர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அதே நேரம் எந்த ஒரு உறுப் பினருக்கும் குறிப்பிட்ட அமைச்சுத் துறைசார் பொறுப்புக்கள் கொடுக் கப்படாமல் விடுபடவும் இல்லை அவர்கள் அந்தந்த அமைச்சின் குறிப்பிட்ட துறைசார் பொறுப்புக்களை ஏற்று அமைச்சர்களின் மேற்பார் வையின் கீழ் செயற்படுவார்கள். விடுபட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் அந்தந்த அமைச்சர்களால் நேரடி யாகவே கண்காணிக்கப்படுவன.

குறிப்பிட்ட பொறுப்புக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சில பொது ஒழுங்குகளுக்குக் கட்டுப் பட்டே செயலாற்ற வேண்டியிருக் கும். அவையாவன,

காலத்திற்குக் காலம் பொறுப் புள்ள தலைமை அலுவலருடன் சேர்ந்து குறிப்பிட்ட அமைச்சின் ஊடாக ஆற்றப்படும் காரியங்கள் அனைத்தையும் மீளாய்வு செய் தல் வேண்டும்.

அதேபோல் அந்தந்த அமைச் சரினால் நடைமுறைப்படுத்தப் படும் செயற்திட்டங்களின் நன்மை தீமைகள், பயன்கள், விளைவுகள் ஆகிய தொடர்ந்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இருமாதங்களுக்கு ஒருமுறை அமைச்சருக்கும் முதலமைச்சருக் கும் தமது கருத்துக்களை மேற்படி உறுப்பினர்கள் எழுத்து மூலம் தெரி யப்படுத்தி வரவேண்டும்.

இவற்றை விட சில நடவடிக்கை களில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டி இருக்கும். அவை பின் னர் அறிவிக்கப்படுவன. அமைச் சர்கள், அமைச்சுக்கள், பொறுப் பான விடயங்கள், பொறுப்பானவர் கள் போன்ற விபரங்கள் பின்வரு மாறு,

சபையின் தவிசாளர் - சீ.வீ.கே. சிவஞானம் (இ.த.அ. கட்சி யாழ்ப்பாணம்.

19-ம் பக்கம் பார்க்க

# சத்தியப்பிரமாண...

யெனவும் இலங்கை தமிழர சுக்கட்சியினர தான் தனிப்பட்ட ரீதியில் இந்த தெரிவினை மேற் கொண்டனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஏற்பாட்டில் பல கூட்டங்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்த அமைச்சர்கள் தெரிவுக்காக நடத்தப்பட்ட போதும் அதில் தம்மால் முன் வைக்கப்பட்ட கோரிக் கைகளைப் புறம்தள்ளி அமைச்சர்கள் தெரிவு மேற் கொள்ளப்பட்டுள்ள தாகவும் அங்கத்துவ கட்சிகளின் தலை வர்கள் குற்றம்சாட்டியுள்ள னர்.

இந்நிலையில் சத்தியப்பிர மாண நிகழ்வினை புறக்கணிக்க தாம்முடி வெடுத்ததாகவும் தமது கட்சி சார்பான மாகாணசபை உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கு கொள்ளமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# தவிசாள...

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவு செய் யப்பட்டதாக உத்தியோகப் பற்றற்ற செய்திகள் முன்னர் வெளியாகியருந்தமை குறிப் பிடத்தக்கது. (எ-6)


SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான
### தபால் பொதிகள் சேவை



- 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கு விரைவான தபால் பொதிகள் சேவை
- மிகக் குறைந்த கட்டணம்
- 100 வீத நம்பிக்கையான சேவை
- பொதிகளுக்கான இலவச காப்புறுதி

**Speed lanka express cargo**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0213201204 0776217926
www.speedlanka.net
(C-5143)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org